சோதிடமலர்

SOTHIDA MALAR



உள்ளே.....

சைவ விரதங்களும் விழாக்களும்
நவக்கிரகங்களின் தத்வங்கள்
சுப முகூர்த்தம் வைத்தல்
அதிஷ்ட எண் ஞானம்
ஆய்வு மன்றம்

விபவ வரு மாசி மீ (12-2-89 — 13-3-89) ரூபா: 4-00

ശ്രീമലബാർ

SRIMALABAR

சோதிடமலர்

SOTHIDA MALAR

மலர் 11 ✻ இதழ் 11

ஆசிரியர்:

பிரம்மஶ்ரீ கி. சதாசிவ சர்மா

(சம்ஸ்கிருத பண்டிதர்)

✻

விபவ மாசி ஹ மீ

(12 - 2 - 89)

ஷஹரஸ்ரார்த்தி ஸமர்ப்பித லிங்கம்
நிஶுத்தஹாவித மொஹித லிங்கம்।
ஜந்மஜதுஃவ விநாஶந லிங்கம்
தத்வணஸாத் ஸதாசிவ லிங்கம்॥

சரண மங்கையோர் பங்குறை சங்கர சரணஞ்
சரண மங்கலமாகிய தனிமுதல் சரணஞ்
சரண மந்திர வடிவமாஞ் சதாசிவ சரணஞ்
சரண மும்பர்க ணுயக பசுபதி சரணம்.

நற்சிந்தனைகள்:-

● ஒருவன் தோண்டிய குளத்தில் மற்றொருவன் நீராடுவதன் முன் ஐந்துபிடி மண்ணுவது குளத்திலிருந்து வெளியே கரையில் ஒதுக்கிய பின்பே நீராடவேண்டியது முறையாகும் இல்லாவிடில் நீராடியவன் செய்த தருமம் யாவும் குளம் வெட்டியவனைச் சார்ந்துவிடும்.

● உடல் நீரினாலும் மனம் சத்தியத்தாலும், ஆன்மா மெய்ப்பொருளுணர்வாலும் தவம் முயற்சியாலும் புத்தி உண்மையறிவாலும் தூய்மையடைகின்றன.

● உண்மைகூறுவோர் இம்மையிற் புகழும் மறுமையில் மேலான உலகமும் பெறுவர். உண்மை தெய்வத்தன்மையுடையது. உண்மை பேசுவதால் ஒருவன் தூய்மையடைகிறான்.

● நாம் செய்யும் எந்த செயல்களையும் வான், மண், காற்று, நீர், மனம், சூரியன், சந்திரன், அக்கினி, யமன், இரவு, சந்தியாகாலம், அறம் என்பன அயராது அறிந்து கொண்டேயிருக்கின்றன. எனவே தெய்வத்துக்கும் மனச்சாட்சிக்கும் விரோதமில்லாமல் எவற்றையும் செய்யப் பழகிக் கொள்ளவேண்டும்.

மஹா சிவராத்திரி

உலகெலாமுணர்ந்து ஓதுதற்குரியவனாகவும், நிலாவுலாவிய நீர்மலி வேணியனாகவும், அலகில் சோதியனாகவுமிலங்குகின்ற சிவப் பரம்பொருளை பிரார்த்தனை செய்வதற்குகந்த விசேடித்த காலம் மாசிமாத தேய்பிறைச் சதுர்த்தசி கூடும் இரவு மஹா சிவராத்திரியாகும். இத்தினம் பகல் திரயோதசியும் இரவு (நடுநிசியில்) சதுர்த்தசியும் வியாபித்திருப்பது மிகவும் விசேடமுடையது என ஆகமங்கள் கூறுகின்றன. ஏனெனில் சக்தி ஸ்வரூபமான திரயோதசியும், சிவரூபமான சதுர்த்தசியும் ஒன்றுசேரும் காலமாகி நடுநிசியில் சதுர்த்தசி வியாபித்து மறுநாள் பாரணை வரை சேர்ந்திருப்பதும் விரத மேன்மைக்குரியதாகும். இறைவன் சோதிவடிவமாகத் தோன்றி அகந்தை கொண்ட பிரம்ம விஷ்ணு தேவர்களை அடக்கி அருள்புரிந்த தினம் மகாசிவராத்திரியாகும். இத்தினத்தில் சைவம்க்களாகிய நாம் நித்தியகர்ம அனுஷ்டானங்களை முடித்து ஆலயம் சென்று இறைவனை வணங்கி பகல் உபவாசமிருந்து இரவு முழுவதும் நித்திரை செய்யாது சிவசிந்தனை, சிவ நாம பஜனை, பாராயணம் என்பவற்றில் ஈடுபட்டு நான்கு யாம காலங்களிலும் அபிஷேக ஆராதனைகளைத் தரிசித்து மறுநாட்காலை ஸ்நானம செய்து காலை ஒரு நாழிகைக்குமுன் (காலை எட்டரை மணிக்குமுன்) பாரணைசெய்து விரதபூர்த்திசெய்து கொள்ளுதல் முறையாகும். இரவு முழுவதும் கண்விழிக்கமுடியாதோர் லிங்கோற்பவகாலம் வரையாவது (நடு இரவு 11 மணி முதல் பன்னிரண்டேகால் மணிவரையுள்ள காலம்) விழித்திருந்து சிவபூஜை செய்தல் பலனுக்குரியதாகும். இவ்விரதம் இருபத்தினாங்கு, பன்னிரண்டு, ஆறு வருடங்களாவது கடைப்பிடிக்க வேண்டுமென்பது விரத நியமமாகும். ஆ—ர்

விபவ வருஷ மாசி மாத கிரக நிரயனஸ்புடங்கள்

(இலங்கை நேரப்படி காலை 5-30 மணிக்கு Nirayana Longitudes of Planets for 5-30 A. M. C. S. T.)

ராகுஸ்புடத்துடன் 6 ராசி கூட்ட கேதுஸ்புடம் வரும் (அயனம்சம் 23 பா 42கலை 25விகலை)

தேதி		நாக்ஷத்ர நேர	சூரியன் ☉			சந்திரன் ☽			செவ்வாய் ♂			புதன் ☿			குரு ♃			சுக்கிரன் ♀			சனி ♄			ராகு ☊			யுரேனஸ் ♅			நெப்டி ♆		
ஆங்கி	மாசி	பகல் 12-00	ரா	பா	க	ரா	பா	க	ரா	பா	க	ரா	பா	க	ரா	பா	க	ரா	பா	க	ரா	பா	க	ரா	பா	க	ரா	பா	க	ரா	பா	க
		ம நி. செ																														
12	1	21 29 9	9	29	33	0	17	4	0	19	52	9	4	19	1	3	15	9	16	39	8	16	31	10	11	50	8	10	18	8	17	42
13	2	21 33 5	10	0	33	1	0	57		20	28		4	59		3	20		17	54		16	37		11	47		10	21		17	44
14	3	21 37 2		1	34	1	14	32		21	3		5	42		3	24		19	10		16	42		11	44		10	24		17	45
15	4	21 40 58		2	35	1	27	47		21	39		6	29		3	29		20	25		16	48		11	41		10	26		17	47
16	5	21 44 55		3	35	2	10	46		22	14		7	20		3	34		21	40		16	54		11	38		10	29		17	49
17	6	21 48 51		4	35	2	23	30		22	50		8	14		3	40		22	55		16	59		11	35		10	31		17	50
18	7	21 52 48		5	36	3	6	1		23	26		9	12		3	45		24	10		17	5		11	32		10	34		17	52
19	8	21 56 45		6	37	3	18	20		24	1		10	12		3	51		25	25		17	10		11	29		10	36		17	54
20	9	22 0 41		7	37	4	0	29		24	37		11	14		3	57		26	40		17	16	10	11	26		10	39		17	55
21	10	22 4 38		8	38	4	12	30		25	13		12	19		4	2		27	55		17	21		11	23		10	41		17	57
22	11	22 8 34		9	38	4	24	25		25	49		13	26		4	9	9	29	10		17	26		11	20		10	43		17	59
23	12	22 12 31		10	39	5	6	15		26	25		14	36		4	15	10	0	25		17	31		11	17		10	45		18	0
24	13	22 16 27		11	39	5	18	4		27	1		15	47		4	21		1	40		17	36		11	14		10	48		18	2
25	14	22 20 24		12	39	5	29	53		27	37		17	0		4	28		2	55		17	41		11	11		10	50		18	3
26	15	22 24 20		13	40	6	11	47		28	13		18	15		4	35		4	10		17	46		11	8		10	52		18	5
27	16	22 28 17		14	40	6	23	49		28	49		19	32		4	42		5	24		17	51		11	5		10	54		18	6
28	17	22 32 14	10	15	40	7	6	3	0	29	25	9	20	50	1	4	49	10	6	39	8	17	56	10	11	2	8	10	56	8	18	8
1	18	22 36 10	10	16	40	7	18	33	1	0	1	9	22	10	1	4	56	10	7	54	8	18	1	10	10	58	8	10	58	8	18	9
2	19	22 40 7		17	41	8	1	24		0	37		23	31		5	3		9	9		18	6		10	54		11	0		18	10
3	20	22 44 3		18	41	8	14	38		1	13		24	53		5	11		10	24		18	10		10	51		11	2		18	12
4	21	22 48 0		19	41	8	28	20		1	49		26	17		5	19		11	39		18	15		10	48		11	4		18	13
5	22	22 51 57		20	41	9	12	28		2	26		27	43		5	26		12	54		18	19		10	45		11	5		18	14
6	23	22 55 53		21	41	9	27	2		3	2	9	29	9		5	34		14	9		18	24		10	42		11	7		18	16
7	24	22 59 49		22	41	10	11	55		3	38	10	0	37		5	42		15	24		18	28		10	39		11	9		18	17
8	25	23 3 46		23	41	10	27	3		4	15		2	6		5	51		16	39		18	32		10	36		11	11		18	18
9	26	23 7 43		24	41	11	12	14		4	51		3	36		5	59		17	53		18	37		10	33		11	12		18	19
10	27	23 11 39		25	41	11	27	20		5	28		5	8		6	8		19	8		18	41		10	30		11	14		18	20
11	28	23 15 36		26	41	0	12	11		6	4		6	40		6	16		20	23		18	45		10	27		11	15		18	22
12	29	23 19 32		27	41	0	26	42		6	41		8	14		6	25		21	38		18	49		10	24		11	17		18	23
13	30	23 23 29	10	28	41	1	10	47	1	7	17	10	9	49	1	6	34	10	22	53	8	18	52	10	10	21	8	11	18	8	18	24

மார்ச் 1989

நலந்தரும் கால ஹோரைகள்

சூரிய ஹோரை:- உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

சந்திர ஹோரை:- ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்கள் ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்: தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

செவ்வாய் ஹோரை:- உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

புதன் ஹோரை:- வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வர்ஞலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று.

குரு ஹோரை:- எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

சுக்கிர ஹோரை:- சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விளையாட்டுப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னாபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல், இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

சனி ஹோரை:- இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

(மாசி மாதம் 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 34 நிமிஷம்)

வாரம்	6...34 7...34	7...34 8...34	8...34 9...34	9...34 10...34	10...34 11...34	11...34 12...34	12...34 1...34	1...34 2...34	2...34 3...34	3...34 4...34	4...34 5...34	5...34 6...34
பகல்												
ஞாயி	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி
திங்க	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய
செவ்	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி
புதன்	புதன்	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு	செவ்
வியா	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்
வெள்	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு
சனி	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி
இரவு												
ஞாயி	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்
திங்க	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு
செவ்	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி
புதன்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி
வியா	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய
வெள்	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி
சனி	புதன்	சந்தி	சனி	குரு	செவ்	சூரிய	சுக்கி	புதன்	சந்தி	சனி	குரு	செவ்

குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

நாள் எப்படி?

மாசி 1 ஞாயி (12-2-89) ஸப்தமி மாலை 5-30 வ. பரணி-மரணம் இரவு 10-02 வரை, அசுபதினம். ராகு 5 04 - 6-32

மாசி 2 திங் (13-2-89) அஷ்டமி மாலை 4-10 வரை. கார்த்திகை-மரணம் இரவு 9-28 வரை, கார்த்திகை விரதம் அசுபதினம். ராகு 8-04—9-32

மாசி 3 செவ் (14-2-89) நவமி பகல் 3-19 வரை, ரோகிணி இரவு 9-32 வரை, அமிர்தசித்தம், சுபதினமன்று. ராகு 3-34—5-02

மாசி 4 புத (15-2-89) தசமி பகல் 3-03 வரை, மிருகசீரிடம் இரவு 9-53 வரை, சித்தம். நற்கருமங்களுக்கு உகந்தது. ராகு 12-33—2-01

மாசி 5 வியா (16-2-89) ஏகாதசி பகல் 3-19 வரை, திருவாதிரை-மரணம் இரவு 10-52 வரை, ஸர்வ ஏகாதசிவிரதம், அசுபதினம். ராகு 2-03—3-31

மாசி 6 வெள் (17-2-89) துவாதசி மாலை 4-05 வ. புனர்பூசம்-சித்தம் இரவு 12-20 வரை, பிரதோஷ விரதம். அவசியகருமங்கள் செய்யலாம். ராகு 11-03—12-31

மாசி 7 சனி (18-2-89) திரயோதசி மாலை 5-20 வ. பூசம்-சித்தம் பி.இ. 2-15 வரை, சுபகருமங்கட்கு நன்று. ராகு 9-32—11-00

மாசி 8 ஞாயி (19-2-89) சதுர்த்தசி-மரணம் மாலை 7-00 வரை, ஆயிலியம்-சித்தம் பி.இ. 4-33 வரை, அசுபதினம். ராகு 5-02—6-30

மாசி 9 திங் (20-2-89) பூரணை இரவு 9-02 வரை, மகம் முழுவதும், மரணம், பூரணைவிரதம், மாசிமகம். சுபதினமன்று. ராகு 8-02—9-30

மாசி 10 செவ் (21-2-89) பிரதமை இரவு 11-23 வரை, மகம் காலை 7-11 வரை, சித்தம், சுபகருமங்கட்கு உகந்த தினமல்ல. ராகு 3-31—4-59

மாசி 11 புத (22-2-89) துவிதியை இரவு 1-56 வ. பூரம் பகல் 10-04 வரை, அமிர்தம், பகல் 10-04 இன் மேல் அவசரகருமங்கள் செய்யலாம். ராகு 12-31—1-59

மாசி 12 வியா (23-2-89) திரிதியை பி.இ. 4-36 வ. உத்தரம்-மரணம் பகல் 1-07 வரை, அசுபதினம். ராகு 2-01—3-29

மாசி 13 வெள் (24-2-89) சதுர்த்தி முழுவதும், அத்தம் மாலை 4-13 வரை, அமிர்தசித்தம், சுபகருமங்கட்கு நன்று. ராகு 11-00—12-28

மாசி 14 சனி (25-2-89) சதுர்த்தி காலை 7-12 வ. சித்தம்-மரணம் மாலை 7-12 வரை, அசுபதினம். ராகு 9-30—10-58

மாசி 15 ஞாயி (26-2-89) பஞ்சமி காலை 9-34 வ. சுவாதி-சித்தம் இரவு 9-56 வரை, அவசரகருமங்கள் செய்யலாம். கரிநாள். ராகு 5-00—6-28

மாசி 16 திங் (27-2-89) ஷஷ்டி பகல் 11-34 வரை, விசாகம் இரவு 12-14 வரை, மரணம், கரிநாள், சுபதினமன்று. ராகு 7-59—9-27

மாசி 17 செவ் (28-2-89) ஸப்தமி பகல் 1-09 வரை, அனுஷம் - சித்தம் பி.இ 1-56, கரிநாள். நற்கருமங்களை தவிர்க்கவும். ராகு 3-29—5-57

மாசி 18 புத (1-3-89) அஷ்டமி பகல் 1-57 வரை, கேட்டை சித்தம் பி.இ 2-56 வரை, அசுபதினம். ராகு 12-29—1-57

மாசி 19 வியா (2-3-89) நவமி பகல் 2-00 வரை, மூலம் பி.இ 3-10 வரை, சித்தம், சுபதினமன்று. ராகு 1-58—3-27

மாசி 20 வெ (3-3-89) தசமி பகல் 1-14 வரை, பூராடம்-மரணம் பி.இ. 2-38 வரை, அசுபதினம். ராகு 10-57—12-26

மாசி 21 சனி (4-3-89) ஏகாதசி—மரணம் பகல் 11-42 வரை, உத்தராடம் பி.இ. 1-22 வரை, ஸர்வஏகாதசிவிரதம், சுபதினமன்று. ராகு 9-27—10-56

மாசி 22 ஞாயி (5-3-89) துவாதசி காலை 9-28 வ. திருவோணம்-அமிர்தம் இரவு 11-28 வரை, சுபகருமங்கட்கு நன்று. ராகு 4-56—6-25

மாசி 23 திங் (6-3-89) திரயோதசி காலை 6-40 வ. சதுர்த்தசி பி.இ. 3-23 வரை, அவிட்டம் இரவு 9-05 வரை, சித்தம். மஹாசிவராத்திரி, அவசியகருமங்கள் செய்யலாம். ராகு 7-56—9-25

மாசி 24 செவ் (7-3-89) அமாவாசை இரவு 11-49 வரை, சதயம் மாலை 6-21 வரை, மரணம். அமாவாசை விரதம், சுபதினமன்று. ராகு 3-26—4-55

மாசி 25 பத (8-3-89) பிரதமை இரவு 8-08 வரை, பூரட்டாதி பகல் 3-36 வரை, சித்தம், அசுபதினம். ராகு 12-25—1-54

மாசி 26 வியா (9-3-89) துவிதியை மாலை 4-28 வ. உத்தரட்டாதி பகல் 12-31 வரை, நற்கருமங்கட்கு உகந்ததினம். ராகு 1-55—3-24

மாசி 27 வெள் (10-3-89) திரிதியை பகல் 1-00 வ. ரேவதி காலை 9-47 வரை, அமிர்தம், சதுர்த்திவிரதம், அவசியகருமங்கள் செய்யலாம்.
ராகு 10-55—12-24

மாசி 28 சனி (11-3-89) சதுர்த்தி காலை 9-54வரை, அசுவினி காலை 7-22 வரை, பரணி பி.இ. 5-28 வரை, அசுபதினம். ராகு 9-24—10-53

மாசி 29 ஞாயி (12-3-89) பஞ்சமி மரணம் காலை 7-18 வரை, ஷஷ்டி பி.இ. 5-19 வரை, கார்த்திகை பி.இ 4-09 வரை, ஷஷ்டிவிரதம், கார்த்திகைவிரதம் சுபதினமன்று. ராகு 4-54—6-23

மாசி 30 திங் (13-3-89) ஸப்தமி பி.இ. 4-03வரை, ரோகிணி பி:இ. 3-32 வரை, அமிர்தசித்தம், நற்கருமங்கள் செய்யலாம். ராகு 7-54—9-23

விரைவில் வெளிவருகின்றது!

சுக்ல வருட

திருக்கணித பஞ்சாங்கம்

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

மாசி மகம்

'மாக' (மாசி) மாதத்தில் 'மக' நட்சத்திரம் கூடும் புண்ணியகாலம் இதுவாகும். முக்கியமாக புண்ணியதீர்த்தங்களில் நீராடுவதற்குகந்ததாகும். முன்னேர்சமயம் வருணபகவானுக்கே கற் பட்ட பிரமகத்திதோஷத்தை நீக்கும் பொருட்டு இறைவன் சமுத்திரத்தில் எழுந்தருளி சமுத்திரத்தில் மறைந்திருந்த வருணதேவனின் பாசக்கட்டுக்களை நீக்கி விடுதலை செய்ததினமென்றும், இன்னேர் சந்தர்ப்பத்தில் பார்வதிதேவி சிவபெருமானுடைய ஆஞ்ஞைப்படி உலகமக்களுய்வடையும் பொருட்டு தக்கன் மகளாக காறிந்தி நதியில் தாமரைப்பூவினில் வலம்புரிச்சங்கு வடிவமாக அமர்ந்திருந்த போது வேதவல்லியுடன் இந்நதியில் நீராடவந்த தக்கன் இச்சங்கையெடுத்தபோது அழகிய பெண் குழந்தை வடிவமாகியது. இவ்வாறு அம்பிகையே குழந்தைவடிவமாக பூமியில் அவதரித்த தினம் இதுவென்றும் புராணகதைகள் கூறுகின்றன. இவற்றை அநுசரித்து இப்புண்ணிய காலத்தில் சமுத்திர நதி நீராடலுக்கு சிறப்பாக இருப்பதை தொன்றுதொட்டு சைவமக்கள் நினைவுபடுத்திவருகின்றனர் எனலாம்.

கட்டுரைப் போட்டி பரிசு ரூபா: 50/-

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுடன் 'சோதிட மலருக்கு' 12-வது ஆண்டு ஆரம்பமாவதையொட்டி இக்கட்டுரைப் போட்டி இடம்பெறுகின்றது.

★ "சோதிடமும் விஞ்ஞானமும்" ★

போட்டி நிபந்தனைகள்:

1. மேலே தரப்பட்டுள்ள தலைப்பின் கீழ் கட்டுரை எழுதப்படவேண்டும்.
2. கட்டுரைகள் புல்ஸ்காப் தாளில் ஏறக்குறைய ஐந்து பக்கங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
3. பரிசுக்குத் தேர்ந்தேடுக்கப்படும் கட்டுரைக்கு ரூபா 50/- ரொக்கப் பரிசு வழங்கப்படுவதுடன் பரிசுக் கட்டுரை ஆண்டு மலரில் பிரசுரிக்கப்படும்.
4. கட்டுரைகள் 31-3-89க்கு முன்னதாக எமக்குக் கிடைக்க வேண்டும்.
5. போட்டி பற்றி ஆசிரியர் குழுவின் தீர்ப்பே முடிவானது.

கட்டுரைகளை அனுப்பவேண்டிய முகவரி: கட்டுரைப் போட்டி, 'சோதிட மலர்'
திருக்கணித நிலையம்,
மட்டுவில், சாவகச்சேரி.

உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

விபவ ஆம் மாசி மீ 1-ந் தேதி முதல் 30 -ந் தேதி வரை. (12-2-89 முதல் 13-3-89 வரை)

இங்	தமி	வாரம்	கும்பம்		மீனம்	மேடம்	இடபம்	மிதுனம்	கடகம்	சிங்கம்	கன்னி	துலா	விருச்சி	தனுசு	மகரம்
பெப்	மாசி		ம.மி. முதல் (காலை)	ம.மி. வரை	ம. மி. வரை (காலை)	ம.மி. வரை (பகல்)	ம. மி. வரை (பகல்)	ம. மி. வரை (பி.ப)	மி. ம. வரை (மாலை)	ம. மி. வரை (இரவு)	ம. மி. வரை (இரவு)	ம. மி. வரை (இரவு)	ம. மி. வரை (பி.இ)	ம. மி. வரை (பி.இ)	ம. மி வரை) (பி.இ)
12	1	ஞாயி	6 34	8 20	10 03	11 52	1 55	4 06	6 14	8 14	10 13	12 17	2 28	4 36	6 32
13	2	திங்	6 32	8 16	9 59	11 48	1 51	4 00	6 10	8 10	10 9	12 12	2 24	4 32	6 28
14	3	செவ்	6 28	8 13	9 56	11 45	1 48	3 59	6 07	8 07	10 6	12 10	2 21	4 29	6 24
15	4	புதன்	6 25	8 9	9 52	11 41	1 44	3 55	6 03	8 03	10 2	12 6	2 17	4 25	6 21
16	5	வியா	6 21	8 5	9 48	11 37	1 40	3 51	5 59	7 59	9 58	12 2	2 13	4 21	6 17
17	6	வெள்	6 17	8 1	9 44	11 33	1 36	3 47	5 55	7 55	9 54	11 58	2 9	4 17	6 13
18	7	சனி	6 13	7 57	9 40	11 29	1 32	3 43	5 51	7 51	9 50	11 54	2 5	4 13	6 9
19	8	ஞாயி	6 9	7 54	9 37	11 26	1 29	3 40	5 48	7 48	9 47	11 51	2 2	4 10	6 6
20	9	திங்	6 6	7 50	9 33	11 22	1 25	3 36	5 44	7 44	9 43	11 47	1 58	4 6	6 2
21	10	செவ்	6 2	7 45	9 28	11 17	1 20	3 31	5 39	7 39	9 38	11 42	1 53	4 1	5 57
22	11	புதன்	5 57	7 42	9 25	11 14	1 17	3 28	5 36	7 36	9 35	11 39	1 50	3 58	5 54
23	12	வியா	5 54	7 38	9 21	11 10	1 13	3 24	5 32	7 32	9 31	11 35	1 46	3 54	5 50
24	13	வெள்	5 50	7 34	9 17	11 6	1 9	3 20	5 28	7 28	9 27	11 31	1 42	3 50	5 46
25	14	சனி	5 46	7 30	9 13	10 2	1 5	3 16	5 24	7 24	9 23	11 27	1 38	3 46	5 42
26	15	ஞாயி	5 42	7 26	9 9	10 58	1 1	3 12	5 20	7 20	9 19	11 23	1 34	3 42	5 38
27	16	திங்	5 38	7 22	9 5	10 54	12 57	3 08	5 16	7 16	9 15	11 19	1 30	3 38	5 34
28	17	செவ்	5 35	7 18	9 1	10 50	12 53	3 04	5 12	7 12	9 11	11 15	1 26	3 34	5 30
மார்ச் 1989															
1	18	புதன்	5 30	7 14	8 57	10 46	12 49	3 00	5 08	7 08	9 07	11 11	1 22	3 30	5 26
2	19	வியா	5 26	7 10	8 53	10 42	12 45	2 56	5 04	7 04	9 03	11 07	1 18	3 26	5 22
3	20	வெள்	5 22	7 6	8 49	10 38	12 41	2 52	5 00	7 00	8 59	11 03	1 14	3 22	5 18
4	21	சனி	5 18	7 2	8 45	10 34	12 37	2 48	4 56	6 56	8 55	10 59	1 10	3 18	5 14
5	22	ஞாயி	5 14	6 58	8 41	10 30	12 33	2 44	4 52	6 52	8 51	10 55	1 6	3 14	5 10
6	23	திங்	5 10	6 54	8 37	10 26	12 29	2 40	4 48	6 48	8 47	10 51	1 2	3 10	5 6
7	24	செவ்	5 6	6 50	8 33	10 22	12 25	2 36	4 44	6 44	8 43	10 47	12 58	3 6	5 2
8	25	புதன்	5 2	6 46	8 29	10 18	12 21	2 32	4 40	6 40	8 39	10 43	12 54	3 2	4 58
9	26	வியா	4 58	6 42	8 25	10 14	12 17	2 28	4 36	6 36	8 35	10 39	12 50	2 58	4 54
10	27	வெள்	4 54	6 38	8 21	10 10	12 13	2 24	4 32	6 32	8 31	10 35	12 46	2 54	4 50
11	28	சனி	4 50	6 34	8 17	10 6	12 09	2 20	4 28	6 28	8 27	10 31	12 42	2 50	4 46
12	29	ஞாயி	4 46	6 30	8 13	10 02	12 05	2 16	4 24	6 24	8 23	10 27	12 38	2 46	4 42
13	30	திங்	4 42	6 27	8 10	9 59	12 02	2 13	4 21	6 21	8 20	10 24	12 35	2 43	4 39

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை பிறந்த சரியான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: மாசிமீ 30ஆ (13-3-89) பகல் 9 -00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (8-10 — 9-59) மேடலக்னம்

மாசி மாதக் கிரகநிலை



கிரக மாற்றங்கள்

11ஆ (22-2-89) இரவு 9-36க்கு கும்-சுக்
17ஆ (28-2-89) பி.இ. 4-56க்கு இட-செவ்
23ஆ (6-3-89) மாலை 7-17க்கு கும்-புத
21ஆ சுக்கிரன் அஸ்தமனம்

சந்திரனது இராசிநிலை

மாசி	1ஆ	(12-2-89)	பி.இ	3-50 முதல்	இடபம்
	4ஆ	(15-2-89)	காலை	9-33 ,,	மிதுனம்
	6ஆ	(17-2-89)	மாலை	5-55 ,,	கடகம்
	8ஆ	(19-2-89)	பி.இ.	4-32 ,,	சிங்கம்
	11ஆ	(22-2-89)	மாலை	4-49 ,,	கன்னி
	14ஆ	(25-2-89)	காலை	5-44 ,,	துலாம்
	16ஆ	(27-2-89)	மாலை	5-42 ,,	விருச்சிகம்
	18ஆ	(1-3-89)	பி.இ.	2-56 ,,	தனுசு
	21ஆ	(4-3-89)	காலை	8-22 ,,	மகரம்
	23ஆ	(6-3-89)	பகல்	10-20 ,,	கும்பம்
	25ஆ	(8-3-89)	பகல்	10-10 ,,	மீனம்
	27ஆ	(10-3-89)	காலை	9-47 ,,	மேடம்
	29ஆ	(12-3-89)	பகல்	11-04 ,,	இடபம்

கிரகநிலை குறிக்க:-

* 6-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி மாசி மீ 30ஆ பகல் 9-00 மணிக்கு மேட லக்னம் என அறித்து கொண்ட பின் 'மேடம், என்ற கட்டத்தில் 'ல'என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வனமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

மாதபலன்

மாதம் பிறக்கும்போது கடகலக்னம் உதயமாகிறது. 2-ம் வீட்டில் கேதுவும், 8-ம் வீட்டில் சூரியனும் இருப்பது நாட்டின் அரசியல் துறைக்கு ஓர் சோதனைக்காலமாக இருக்கும். பொருளாதாரம் வெகுவாகப் பாதிப்படையும். லக்கினாதிபதி 10ல் இருப்பதால் பல கிக்கல்களின் மத்தியிலும் எல்லாக்கருமங்களும் நன்கு நடைபெறும்.

மாசி மாத வானியற் காட்சிகள்
Astronomical Phenomena

12-2-89 — 13-3-89

சூரியன்:- 12-2-89 மாலை 4-14 மணிக்கு கும்பராசிப் பிரவேசம்
12-2-89 உதயம் காலை 6-34
12-2-89 உச்சம் பகல் 12-24
12-2-89 அஸ்தமனம் மாலை 6-16
26-2-89 உதயம் காலை 6-30
26-2-89 உச்சம் பகல் 12-23
26-2-89 அஸ்தமனம் மாலை 6-17

சந்திரன்:- 20-2-89 பூரணை இரவு 9-02
7-3-89 அமாவாசை இரவு 11-49
9-3-89 சந்திரதரிசனம்

கிரகங்கள்

புதன்:- மாதாரம்பத்தில் சூரியோதயம் முன் கிழக்குவானில் 25பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் 18-2-89ல் சூரியனிலிருந்து கூடிய தூரமான 26½பாகை உயரத்திலும் காணப்படும். பின் படிப்படியாக உயரம் குறைந்து மாதமுடிவில் 19பாகை உயரத்திற் காணப்படும். 6-3-89ல் கும்பராசியிற் பிரவேசிக்கின்றது.

சுக்கிரன்:- மாதத்தொடக்கத்தில் சூரியோதயம் முன் கிழக்குவானில் 13 பாகை உயரத்திற் தோன்றுகின்ற இக்கிரகம் 4-3-89ல் கிழக்கில் அஸ்தமனமடையும். இது 22-2-89இல் கும்பராசியிற் பிரவேசிக்கின்றது.

செவ்வாய்:- மாதாரம்பத்தில் சூரியாஸ்தமனத்தின் பின் உச்சிக்கு மேற்கே 10 பாகை சரிந்து காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 21 பாகை மேற்கிற் சரிந்து தோன்றும். 28-2-89இல் இடபராசியிற் பிரவேசிக்கிறது.

வியாழன்:- மாதத்தொடக்கத்தில் சூரியாஸ்தமனத்தின் பின் உச்சிக்குக் கிழக்கே 5 பாகை சரிவிற் காணப்படுகின்ற இக்கோள் மாதமுடிவில் உச்சிக்கு மேற்கே 22 பாகை சரிந்து தோன்றும். இம்மாதம் முழுவதும் வியாழன் இடபராசியிலேயே சஞ்சரிக்கின்றது.

சனி:- மாதாரம்பத்தில் சூரியோதயத்தின் முன் கீழ்வானில் 42 பாகை உயரத்திற் தோன்றுகின்ற இக்கிரகம் மாதமுடிவில் சுமார் 70 பாகை உயர்ந்து காணப்படும். இம்மாதம் முழுவதும் சனி தனுராசியிலேயே சஞ்சரிக்கின்றது.

யூரேனஸ்:- தனுராசியிலேயே சஞ்சரிக்கின்றது.

நெப்டியூன்:- தனுராசியிலேயே சஞ்சரிக்கின்றது.

புளூட்டோ:- துலாராசியிற் சஞ்சரித்துவருகின்ற இக்கோள் 16-2-89 முதல் வக்கிரகதியிற் செல்லுகின்றது.

சமாகமங்கள்

12-2-89 முற்பகல் சந்திரனிற்குத் தெற்கு 4 பாகை. சூரியாஸ்தமனத்தின் பின் காணவும்.

13-2-89 முற்பகல் சந்திரனிற்குத் தெற்கு வியாழன் 6 பாகை. சூரியாஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.

20-2-89 மாலை சந்திரனால் மகநட்சத்திரம் மறைக்கப்படும். அன்று பூரணையாதலால் இதனை காணமுடியாது.

28-2-89 நள்ளிரவு சந்திரனிற்கு வடபுறத்தில் ஒட்டினாற்போல் கேட்டை நட்சத்திரம் தோன்றும். இதனை சந்திரன் அஸ்தமனமடையுமுன் காணமுடியும்.

3-3-89 நண்பகல் சந்திரனுக்கு வடக்கு சனி 5 பாகை. சூரியாஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.

6-3-89 முற்பகல் சந்திரனிற்கு தெற்கே புதன் ஒட்டினாற்போல் தோன்றும். இதனைச் சூரியோதயம் முன் கீழ்வானில் காணலாம்.

7-3-89 நண்பகல் சந்திரனிற்கு தெற்கு சுக்கிரன் 2 பாகை அன்று சூரியோதயம் முன் கீழ்வானில் காணவும்.

11-3-89 மாலை வியாழனுக்கு வடக்கு செவ்வாய் 2 பாகை. சூரியாஸ்தமனத்தின் பின் பாரிக்கவும்.

12-3-89 முன்னிரவு சந்திரனிற்குத் தெற்கு வியாழன் 6 பாகை, அன்று ஒரு மணித்தியாலத்தின் பின்பு சந்திரனிற்குத் தெற்கு செவ்வாய் 4 பாகை.

இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.
12-2-89 முதல் 13-3-89 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக் கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக் குறைய மூக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.

மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1ம் கால

மேடராசியில் ஜெனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 11ல் (லாபத்தில்) சுவர்ண மூர்த்தியாக வலம்வருவது நன்மையாகும். பொது வாக இவர்களுக்கு இந்தமாதம் சிறப்பாக வர வேற்கத்தக்க மாதமாக அமையும். தேக நலம் குடும்பநலம் என்பன சீராக இருக்கும். பொருள் வருமானமும் கூடும். இராசாங்க உதவிகளும் கிடைக்கும். இவ்வளவு காலமும் இழுபறி நிலையில் இருந்த காரியங்களிலும் சித்தியடைவர். நண்பர் கள், உறவினர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். வீட்டில் அல்லது நெருங்கிய இன பந்துக்களுக்குள் சுபமங்கல கொண்டாட்டங்கள் கூட நிகழக்கூடும்.

குடும்பத்தில் எல்லாவகையிலும் மனநிறைவு கள் ஏற்படும். புத்திரர்கள், பெரியவர்கள், இன பந்துக்களின் உதவிகள் ஒத்தாசைகளும் கிடைக் கும். பொருள் வருமானமும் கூடும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் லாபம் அதி கரிக்கும். வாடிக்கையாளரின் எண்ணிக்கை யும் கூடும். மொத்தவியாபாரிகள். கடல்கடந்த வியா பாரிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும். புதிய முதலீடுகளும் செய்யலாம்.

உத்தியோகத்தரிகளுக்குச் சூரியன் பலம்பெறு வது சிறப்பம்சமாகும். பதவி உயர்வுகள் அல்லது புதிய நியமனங்கள் கூடக்கிடைக்கும். உயர்மட்ட அதிகாரிகளின் பராட்டுக்கள் இவர்களின் உயரிச் சிக்கு வழிவகுக்கும்.

விவசாயிகளுக்குப் பயிர்ச்சேதங்கள் ஏற்பட் டாலும் விளைச்சலும் கூடுதலால் நட்டம் ஏற் பட இடமில்லை. விவசாயப்பண்ணைகளிலும் லாபம் குறைந்தாலும் நட்டம் வராது.

தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை வலுவடை யும். வேலைகொள்ளுவோருடனும் பிணக்குகள் ஏற்

பட இடமில்லை. எண்ணெய் ஆலைகள், இரும்பு முதலிய லோகத்தொழில்கள், சாராதிகளுக்குக் கூடிய வருமானம் கிடைக்கும். ஒப்பந்தத்தொழில் களிலும் லாபம் கிடைக்கும்.

மாணவர் கல்வி வளர்ச்சி குறிப்பிடக்கூடிய தாக முன்னேற்றம்பெறும். பரீட்சைகளின் முடிவு கள் மகிழ்ச்சியைத்தரும். கணிதத்துறை, சட்டத் துறை, மருத்துவத்துறை மாணவர்கள் சிறப்புச் சித்திகள், புலமைப் பரிசுகளும் பெறுவர்.

பெண்களுக்கு இந்தமாதமும் மன நிறைவு கிட்டும். எண்ணங்கள் பெரும்பாலும் நிறைவு பெறும். விவாகாதி சுபமங்கலங்களும் பெறுவர். குடும்பப்பெண்களுக்கும், உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கும் நல்ல நிறைவானகாலம்.

அதிஷ்டநாட்கள்:- பெப்.12,13கா,16,17பக,21
மார்ச்.2கா,3,4கா,7,8கா,11

துரதிஷ்டநாட்கள்:- பெப்.22மா,23,24,27,28
மார்ச்.1,8பக,9,10கா.



கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசிரிடம் 1,2-ம் கால்

இந்த இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 10ல் லோகமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்கிறார். சூரியன் தானபலம் பெற்றாலும் மூர்த்திபலம் பெறுவதால் நன்மை தீமை கலந்த பலன்களே நிகழும். பொதுவாக இவர்களின் உடல்நலம் இடைக்கிடை குன்றும். குடும்பநலமும் பாதிப்புறும். எந்த முயற்சியிலும் எதிர்பாராத முடிவுகள் ஏற்படுதலால் காலவிரையமும் பொருள் விரையமும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஏற்படும். புதிதிரர் குரு முதலிய பெரியவர்களால் கஷ்டங் களும் அவ்வப்போது உண்டாகும். பொதுவாக எல்லாம் "கானல் நீர்போல்" கலைக முறச்செய் யும். பிரதான கிரகங்களான வியாழபகவான், சனீஸ்வரன், செவ்வாய் இவர்களின் துரிக்கோசார சஞ்சாரமும் நிகழ்வதால் நற்பலன்களிலும் தீய பலன்களே அதிகரிக்கலாம்.

குடும்பத்தில் பிணிபீடைகள் அடிக்கடி ஏற்ப டும். கணவன் மனைவியர் கருத்து மோதல்களும், வீணசெலவுகளும் மனஅமைதிக் குறைவை ஏற்ப டுத்தும். குடும்பவருமானம் குறைவுறும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை தொட ரும். முதலீடுகளில் வருமானம் வீழ்ச்சியுறும். நிதி நெருக்கடிகளும் ஏற்படும். வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையும் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்துவதில் அலைச்சல்கள் ஏற்படும். பதவி உயர்வு முதலியன பெறும் சாத்தியம் உண் டாவதும் கஷ்டமே. வேண்டாத இடமாற்றங்கள் வீண்செலவுகளும் சிலருக்கு ஏற்படலாம்.

விவசாயிகளுக்குப் பயிர்அழிவும் உற்பத்தி செலவுகளும் கூடும். விளைச்சலும் குறைவுறும். முதலீடுகளைக் குறைப்பதால் நட்டமும் குறைவு றும். சந்தைவாய்ப்பு கிடைப்பதுமரிது; வாழ்க் கைத்தரமும் குன்றும்.

தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுத்து வதில் சிரமங்களும் கஷ்டங்களும் தொடரும். வேலையிழப்புக்களும் சிலருக்கு ஏற்படும். சிலருக்கு தொழிலுடன் சம்பந்தப்பட்ட விபத்துக்களும் ஏற் படலாம்.

மாணவர் கல்வி முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டைகள் தொடர்ந்தாலும் கடுமுயற்சியால் தேர்ச்சிபெறும் வாய்ப்புக்களும் ஏற்படும். உணர்ச்சிவசப்படாமல் கருமமே கண்ணுங்கருத் பவர்கள் பரீட்சைகளில் சித்திபெறுவர்.

பெண்களுக்கு இராசி அதிபனும் குடும்பாதி பனும் பாபர்மத்தியம் பெறுவதால் எதிர்பார்ப் புக்களில் ஏமாற்றமும் ஏற்படும். விவாகமாகாதவர் களுக்கு விவாகப்பேச்சுக்கள் இழுபறியிலிருக்கும்.

அதிஷ்டநாட்கள்:- பெப்.18பக,14,15மு ப,18,19
மார்ச்.4பக,5,6,8பக,9,10கா

துரதிஷ்டநாட்கள்:- பெப்.12,13கா,26,27பக
மார்ச்.2கா,3,4கா,10பக,11.

மிருகசிரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

இந்த இராசிக் காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 9ல் சுவர்ணமூர்த்தியாக வலம் வருவது நன்மையாகும். கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதம் ஓரளவு சிறப்புக்கள் ஏற்படும். பொருள் வருமானத்திலும் கணிசமான முன்னேற்

றம் ஏற்படும். இராசாங்க உதவிகள், இராசகாரியங்களில் வெற்றிகளும் பெறுவர். சிலருக்கு இராசாங்கத்தில் பதவிகள் கூடக்கிடைக்கும். இராசியைச் சனிபகவான் பார்ப்பதும் குடும்பதிதானத்தைச் செவ்வாய் பார்ப்பதும் உடல்நலக்குறைவு, குடும்பநலக்குறைவுகளை இடைக்கிடை தோற்றுவிக்கும். எவ்வாறுயினும், பூமி - வீடு - வாகன சிறப்பு, விற்றல் வசங்கல் மூலம் லாபம். அந்நியர் - நீசர் உதவிகள் முதலானவையும் கிடைக்கும். குருபகவான் 12ல் இருப்பதால் அலைச்சலும் பொருள்விரையமும் ஏற்படும்.

குடும்பத்தில் பிணிபீடைகள் அடிக்கடி ஏற்படும். குடும்பவருமானமும் கூடும். ஆனால் புத்திரர் உறவினர் உதவுவது கஷ்டம். கணவன் மனைவி உறவு சீராக இருக்கும்.

வர்த்தகர்களுக்கு புதன் சுக்கிரனுடன் சேர்ந்தாலும் பாபர் மத்தியம் பெறுவதால் வியாபாரத்தில் எதிர்பாராத திடீர்நெருக்கடிகளும் ஏற்பட இடமுண்டு.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலம் பெறுவதால் மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். ஆனால் பதவி உயர்ச்சிகள் கிடைப்பது கஷ்டம்.

விவசாயிகள் சமவிளைச்சலையே பெறுவர். எவ்வளவு பிரயாசைப்பட்டு உழைக்கிறார்களோ அதற்கேற்பலாபம் பெறுவது கடினம். விவசாயப்பண்ணைகளிலும் லாபம் குறைவு.

தொழிலாளர் எதிர்பாராத அளவு வேலை வசதிகள் பெறுவது கடினம். ஆலைத்தொழிலாளர்கள் மருத்துவதி தொழிலாளர்களின் வருமானம் கூடும். அவர்களின் வாழ்க்கைத்தரம் சராசரியாக இருக்கும்.

மாணவர் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதால் நன்மைபெறுவர். ஆசிரியர் மாணவர் மத்தியில் கருத்துவேறுபாடுகள் கூட இடைக்கிடை ஏற்படக்கூடும்.

பெண்களுக்கு எந்தமுயற்சியும் எதிர்மாறுகச் சிக்கல்களை ஏற்படுத்தினாலும் ஆச்சரியமில்லை. விவாக முயற்சிகள் பெரும்பாலும் ஏமாற்றம் தரும்.

அதிஷ்டநாட்கள்: பெப். 12,16,17ப,21,22ப,26மு
மார்ச்: 7,8கா,10பகல்,11

துரதிஷ்டநாட்கள்: பெப்: 13ப,14,15மு.ப,27இ.
மார்ச்: 1,4பக,5,6மு.ப,13

புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

இந்த இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 8ல் தாம்ரமூர்த்தியாகப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வதால் நற்பலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. பொதுவாக இவர்களின் உடல்நலம் பாதிப்படையும். குடும்பசுகமும் குறைவுறும். பொருள்வருமானம் குறிப்பிடுமளவு கணிசமாக உயரும். நண்பர்கள், உறவினர்கள், குரு முதலான பெரியவர்களின் உதவிகளும் ஒத்துழைப்பும் கிடைக்கும். எந்தமுயற்சிகளிலும் தடைதாமதங்களின்மேல் காரியசித்தியும் பெறுவர். வியாழபகவானும் சனிபகவானும் சுபகோசாரசஞ்சாரம் செய்வதால் காரியசித்தி, திரவியலாபம், புண்ணிய யாத்திரை முதலானவையும் கலந்துநிகழும்.

குடும்பசுகவீனங்களால் கவலைகள் ஏற்படும். பெரியவர்கள், புத்திரர்கள், உறவினர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும். குடும்பத்தில் விவாகாதி சுபமங்கல கொண்டாட்டங்கள் நிகழும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் இந்தமாதமும் விறுவிறுப்பாக நடந்தாலும் எதிர்பார்த்த லாபம் கிடைப்பது கஷ்டம். பவுண், பொன், ஆபரண வியாபாரிகள் நல்ல லாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் கூடும்; வேலைப்பழுவும், வீண்செலவுகளும் துன்பம் தரும். உடன் உத்தியோகத்தர்களின் உதவி ஒத்தாசைகளும் ஆறுதல் தரும்.

விவசாயிகளுக்குப் பயிர்விளைச்சல் இந்தமாதமும் மனநிறைவைத் தரும். விவசாயப் பண்ணைகளிலும் நல்லவருமானம் கிடைக்கும். பசளை மானியம் முதலியனவும் கிடைக்கும்.

தொழிலாளரின் நாளாந்த வருமானம் கூடும். வேலைவாய்ப்புக்களும் அதிகரிக்கும். எளிபொருள் எண்ணெய் ஆலைத்தொழிலாளர் அதிக வருமானம் பெறுவர்.

மாணவர் கல்விமுன்னேற்றம் தொடரும்; சட்டத்துறை மாணவர் சிறப்புச் சித்திகளுடன் புலமைப்பரிசில்கள் கூடப்பெறுவர்.

பெண்களுக்குக் கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதத்தில் காரியத்தடைகள், எதிர்ப்புக்கள் கூடும். குடும்பத்தில் ஏற்படும் திடீர்நெருக்கடிகளைச் சமாளிக்கவேண்டியும் ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: பெப். 13ப,14,18,19,23,24
மார்ச் 1,8பக,9,10கா,13

துரதிஷ்டநாட்கள்: பெப். 15பி.ப,16,17பகல்
மார்ச் 2காலை,3,4கா,7

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 7ல் ராஜஸமூர்த்தியாகப் பலத்துடன் சஞ்சாரம் செய்வது நன்மைதரும். ஆனால் சூரியன் தானபலம் குறைவதால் நன்மை தீமை கலந்த பலன்கள் நிகழும். பொதுவாக இவர்களின் உடல் நலம் இடைக்கிடை பாதிப்படையும். கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதம் பொருள் வருமானம் கூடும். எனினும் பாரம்பரிய குடும்பவருமானம் ஏமாற்றம்தரும். எந்தமுயற்சிகளிலும் காலதாமதங்களும் வீண்விரையங்களும் செய்தே காரியசித்தி பெறவேண்டி இருக்கும்.

குடும்பத்தில் கருத்து வேற்றுமைகளால் இடைக்கிடை ஏற்படும். குடும்பசுகவீனங்களால் வருமானம் பற்றாக்குறைவும் ஏற்படக்கூடும். புத்திரர், சகோதரர் உதவி ஒத்தாசை கிடைப்பதும் கஷ்டம்.

வர்த்தகர்களுக்குப் புதன், சுக்கிரன் சேர்க்கை பெற்றாலும் பாபகர்த்தரியோகம் பெறுவதால் வியாபார முன்னேற்றம் பெரிதும் தடைப்படும். முதலீடுகளில் வருமானம் குறைவுறும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைத்தாலும் பதவி உயர்வு முதலியன கிடைப்பது கேள்விக்குறியாகவே இருக்கும். சகஉத்தியோகத்தர்களின் உதவிகள் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்உற்பத்திச் செலவுகள் இந்தமாதமும் கூடும். ஆனால் எதிர்பார்த்த விளைச்சல் பெறமுடியாது நட்டம் ஏற்படும். முக்கியமாகக் குத்தகை விவசாயிகள் கடனில் விவசாயம் செய்வதைக் கூடியவரை தவிர்த்தல் நல்லது.

தொழிலாளர் வேலையில்லாத்திண்டாட்டத்தில் அவதிப்படநேரும். கிடைக்கும் அற்பசொற்ப வேலைகளுக்கும் உரிய ஊதியமும் கிடையாது. முக்கியமாக தினச்சம்பளத் தொழிலாளிகளின் நாளாந்த வாழ்க்கையே பாதிப்புறும்.

மாணவர் கல்விக்குழப்பநிலையால், கல்வி வளர்ச்சி தடைப்படும். அதிருப்தியும், வெறுப்பும், ஏமாற்றமும் ஏற்படுவதால் சிலமாணவர்களின் கல்வி தடைப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

பெண்களின் விருப்புக்களை, எதிர்பார்ப்புக்களை அடைவது சிரமமே. பொதுவாக இவர்கள் "நினைப்பது ஒன்றும் நடப்பது ஒன்றுமாக" எதிர்மாறாக எல்லாக்காரியங்களிலும் அவதிப்படுவர்.

அதிஷ்டநாட்கள்:- பெப்.12,16,17பக,21,22ப26
மார்ச்.2கா,3,4கா,10பக11

துரதிஷ்டநாட்கள்:- பெப்.17இர,18,19
மார்ச்.4பக,5,8பக,9,10காலை

உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2 கால்

கன்னியா இராசிக்காரருக்கு இந்தமாதம்சூரியபகவான் 6-ல் லோகமூர்த்தியாக வலம் வருகின்றார். சூரியன் தானபலம் பெற்றாலும் மூர்த்திபலம் பெறுமையால் நன்மை தீமைகலந்தபலன்களே பெரும்பாலும் நிகழும். குரு கேந்திராதிபனாய் திரிகோணத்தில் இருந்து சுபதிருஷ்டி செய்வது நன்மையாகும். பெரும்பாலும் இவர்களின் தேகநலம் குடும்பநலம் என்பன சீராக இருக்கும். கடந்த காலங்களிலும் பார்க்கப் பொருள் வருமானமும் கூடும். முன்இழுபறி நிலையில் இருந்த முயற்சிகளில் காரியசித்தியும் ஏற்படும். புத்திரர், உறவினர் முதலியோரின் உதவி ஒத்தாசை பெறுவர்.

குடும்பத்தில் நல்லுறவு வளரும். குடும்பவருமானமும் கூடும். புத்திரர், உறவினர் உதவி ஒத்தாசைகளும் கிட்டும். சிலருக்கு புண்ணியதலயாத்திரைப்பலனும் கிட்டும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் வருமானம் வரத்தொடங்கும். பவுண், பொன் முதலான ஆபரணவியாபாரிகள் நல்ல லாபம் பெறுவர். புது முதலீடுகளும் செய்யலாம்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலம் பெறுமையால் மேலதிகாரிகளுடன் வாக்கு

வாதங்கள் ஏற்படும். எனினும் தானபெலம் பெறுவதால் பெரும் நெருக்கடிகள் ஏற்படமாட்டாது.

விவசாயிகளுக்கு பயிர் அழிவு ஏற்பட்டாலும் கணிசமான வீளைச்சலும் அதிகரிப்பதால் நட்டம் வரமாட்டாது; விவசாயப்பண்ணைகளிலும் லாபம் கிடையாவிட்டாலும் நட்டம் ஏற்படாது.

தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் ஓரளவில் கிடைக்கும். தொழிலாளர் மத்தியில் ஒத்துழைப்பும் நல்லிணக்கமும் ஏற்படும். தொழிலுடன் சம்பந்தப்பட்ட விபத்துக்கள் அவமிருத்துக்களும் சிலருக்கு ஏற்படக்கூடும்.

மாணவர் கல்வி ஊக்கம் ஆக்கம்தரும். கலைத்துறை, சட்டத்துறை மாணவரிகளின் கல்வி வளர்ச்சி பெருமைதரும். சிலருக்குப் புலமைப்பரிசில்கள், உயர்கல்விவாய்ப்புக்கள் கூடக்கிடைக்கும்.

பெண்களுக்கு இந்தமாதம் ஆரம்பத்தில் இரணங்கள் ஏற்பட்டாலும் மாதக்கடைசியில் மனநிறைவும் பெறுவர். குடும்பப் பெண்களும் மாதக்கடைசியில் விருப்பங்களை நிறைவேற்றுவதால் மகிழ்ச்சியடைவர்.

அதிஷ்டநாட்கள்:- பெப்.13ப,14.17இர,18,19
மார்ச்.1,4ப,5,13

துரதிஷ்டநாட்கள்:- பெப்.12,13கா,21,22ப
மார்ச்.7,8கா,10ப,11

துலாம்

சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3

இந்த இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 5ல் தாம்பரமூர்த்தியாக இருவகைப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வது நற்பலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. பெரும்பாலும் தேகசுகம் கெடும், பொருள் வருமானமும் குன்றும். எதிர்பாராத திடீர் நெருக்கடிகள், அலைச்சல், காரியநட்டம், புத்திராதி உறவினர் துன்பம் முதலானவை நிகழும். குரு அட்டமத்திலும் செவ்வாய் 7,8லும் கோசார சஞ்சாரம் செய்தலின் விபத்து, அவமிருத்துப்பயம், சத்திரசிகிச்சைப்பயம் முதலான துர்ப்பலன்கள் கூடச்சிலருக்கு நிகழும். சனி 4ம்,5ம் அதிபலனுக்கு கோசார பலம் பெறுவதால் அந்நியர் உதவி, அந்நியதேசப் பொருள் வரவு முதலான பலன்களும் ஏற்படும்.

குடும்பத்தில் பிணி - பிடைகள், பிணக்குகள் அடிக்கடி தோன்றிமறையும். குடும்பவருமானத்திலும் செலவுகள் கூடுதலால் கடன்பயமும் ஏற்படும். சுபகருமங்கள் வீட்டில் நிகழ்வதும் கஷ்டமே.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் தொடரும். ஆனால் எதிர்பார்த்த லாபம் பெறுவது கடினம். பழையநிலுவைக் கடன்களை, அறவிடுவதில் விண்சிரமங்கள் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நெருக்குதல்கள் அதிகரிக்கும். பதவிசம்பந்தமான வேலைப்பொறுப்புக்களும் கூடும். வேலையுடன் சம்பந்தப்பட்ட அநாவசியச் செலவுகளால் கடன் தொல்லைகளும் அதிகரிக்கும்.

விவசாயிகளுக்கு இந்தமாதமும் விளைச்சல் மகிழ்ச்சிதரும். முக்கியமாக எள் எண்ணெய் வித்துத்தாவரங்கள் முதலானவை பயிரிடுவோர் அதிகவிளைச்சலும் அதிகலாபமும் பெறுவர்.

தொழிலாளர் வேலைவசதிகள் பெறுவர். நல்ல வருமானமும் பெறுவர். தொழில் பிணக்குகளும் அதிகம் இடம்பெற மாட்டாது.

மாணவர் கல்விக்குழப்பநிலை ஏற்படும். மாணவர் மத்தியில் ஏமாற்றமும் விரக்தியும் ஏற்படுதலால் கல்வியில் அக்கறை காட்ட மாட்டார்கள். பரீட்சைகளிலும் சித்திபெறுவதும் கடினம்.

பெண்களுக்கு விரோதமான புதுப்புதுப்பிணிகள் ஏற்படும். எதனைச் செய்ய நினைப்பார்களோ அது தடைப்பட்டு வேறு புதுப்புதுப்பிரச்சினைகள் ஏற்படும். முக்கியமாக விவாக முயற்சிகள் இழுபறியில் தொடரும் அல்லது முறிவுறும்.

அதிஷ்டநாட்கள்:- பெப்:16,17பக,21,22ப,26
மார்ச்.2கா,3,4கா,7

துரதிஷ்டநாட்கள்:- பெப்:13ப,14,22மா,23,24
மார்ச்.8ப,9,10காலை.18.

விருச்சிகம்

விசாகம், 4-ம் கால், அனுஷம், கேட்டை

இந்த இராசிக்காரருக்குச் சூரியன் 4ல் சுவர்ணமூர்த்தியாகப் பலம்பெறுவது நன்மையாகும். மேலும் குருவின் சுபதிருஷ்டியும் இவர்களுக்குச் சாதாரணமாக ஏழரைச்சனீஸ்வரன் காலம் என்று

கூறினாலும் அது முடிவுறும் காலம் நெருங்க நெருங்க நற்பலன்களும் அதிகரிக்கும் என்று சில சோதிடநூல்களில் கூறப்பட்டிருப்பதால் அவரும் நன்மை பெறுவார் என்பதாகின்றது. எனவே இவர்களுக்கு இந்தமாதம் தொடக்கம் தேகசுகம், குடும்பசுகம், இனசனபந்துக்கள் கொண்டாட்டம், விற்றல் வாங்கல் மூலம் லாபம், அந்நியர் உதவி, அந்நியதேசப் பொருள்வரவு, வீட்டில் மங்கள கொண்டாட்டங்கள், முன்கிடையாது எனக் கைவிடப்பட்ட பொருள்வரவு முதலான சுபபலன்கள் அதிகம் நிகழும்.

குடும்பத்தில் அந்நியோன்னிய உறவுநிலை ஏற்படும். குடும்பவருமானமும் கூடும். இனசன பந்துக்கள் கூட்டம், புத்திரர் முதலான உறவினர், பெரியவர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு இந்தமாதமும் வியாபாரம் சிறாக நடக்கும். அழகுசாதன கவர்ச்சிப்பொருள் வியாபாரிகள் பவுண், பொன் நகைவியாபாரிகள் அதிகலாபம் பெறுவார்கள். நிதிநிலை சிறாகும்.

உத்தியோகத்தர்களுக்குப் பதவியுயர்வுகள், பதவிச்சிறப்புக்கள் முதலான மகிமைகள் பெரும்பாலும் கிடைக்கும். உடன் உத்தியோகத்தர்களுடைய ஆதரவும் பெறுவர்.

விவசாயிகளுக்கு பயிர்விளைச்சல் மனநிறைவைத்தரும். விவசாயப்பண்ணைகளிலும் கூடிய வருமானத்தால் நல்ல லாபம் கிடைக்கும். விளைவுகளுக்கு நல்ல சந்தைவாய்ப்பும் பெறுவர்.

தொழிலாளருக்கு நிறைவானமாதம். பொதுவாக வேலைவாய்ப்பும் அதன்மூலம் வருமானமும் இவர்களைத்தேடிவரும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம் பெறுவர்.

மாணவர் கல்விவளர்ச்சிக்குச் சாதகமான சூழ்நிலைகள் உண்டாகும். மாணவர் மத்தியில் மனஉறுதியும், விடாமுயற்சியும், புத்தூக்கமும் உண்டாகும். இதனால் இவர்களின் கல்விவளர்ச்சியுறும்.

பெண்களுக்கு எண்ணிய எண்ணியாங்கு நிறைவுபெற இந்தமாதத்தில் வழிபிறக்கும். விவாகாதி முயற்சிகளும் மனநிறைவாக நிகழும். குடும்பப்பெண்களுக்கும் பெரும்பாலும் சந்தோஷம் நிறைவேறும்.

அதிஷ்டநாட்கள்:- பெப்.17இ,18,19,23,24,28
மார்ச்.1,4பக,5,8பக,9,10கா

துரதிஷ்டநாட்கள்:- பெப்.12,16,17பக,26,27பக
மார்ச்.10பக,11,12மு.ப.

தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுசு இராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 3ல்ராஜஸமூர்த்தியாகப் பலத்துடன் சஞ்சாரம் செய்வது நன்மையாகும். இவர்களுக்குக் கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதத்தில் சற்று ஆறுதலும் பெறுவர். இவர்களின் தேகநலம் குடும்பநலம் என்பன சிராக இருக்கும். எனினும் இடைக்கிடை பாதிப்பும் பெறும். கடந்தகாலங்களிலும் பார்க்கச் சற்றுக் கூடியவருமானமும் பெறுவர். குருவின் துரிக்கோசாரசஞ்சாரமும், சனியின் குரூர கோசாரசஞ்சாரத்துடன் கூடிய ஏழரை ஆண்டின் நடுப்பகுதியும் நிகழ்வதால் "கேடுவரும்போது மதிகெட்டுவரும்" என்பதற்கினங்க அறிவுடைய பெரியவர்களை விட்டு விலகி சுயநலச்சூழ்ச்சிகாரக் கும்பல்களுடன் சேர்ந்து தனக்குத்தானே கேடுகளையும் சிலர் வருவித்துக் கொண்டாலும் ஆச்சரியமில்லை.

குடும்பத்தில் பிணிபீடைகள் ஏற்படவே செய்யும். தம்பதிகளுக்கிடையில் கருத்து மாறுபாடுகளும் ஏற்படும். குடும்பவருமானத்திலும் செலவுகள் கூடும். புத்திரர்கள் துன்பம் தருவர்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம் பெறுவதால் வியாபாரம் முன்னேறும். வாடிக்கையாளரின் வருகையும் கூடும். நிதிநிலை சீர்கெட்டு இருப்பதால் முதலீடுகளைச் செய்ய முடியாமல் சிலர் கஷ்டமும் அனுபவிப்பர்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நல்லெண்ணம் கிட்டும். ஆனால் பதவி உயர்ச்சி, பதவிச்சிறப்பு முதலியன பேச்சளவிலேயே தொடரும். உடன் உத்தியோகத்தர்களுடன் ஒத்துப்போவதால் நன்மை பெறுவர்.

விவசாயிகளுக்கு இம்மாதமும் எதிர்பார்ப்புக்கள் கிட்டாது. பயிரழிவு தொடரும். விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் ஏற்படும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் கிடையாது.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் குறைந்து கொண்டேபோகும். தினச்சம்பளத் தொழிலாளரின் நாளாந்த வாழ்க்கைக்கே திண்டாட வேண்டிய நிலைகள் ஏற்படும். கடன்பழுவும் ஏறும்.

மாணவர் கல்வியில் வளர்ச்சி படிப்படியாகத் தென்படும். எனினும் ஆசிரியர் மாணவர் மத்தியில் கருத்து வேறுபாடுகளும் இடைக்கிடை ஏற்படும். விடாமுயற்சியுடன் கூடிய சுயமுயற்சியுடையவர்கள் பரீட்சைகளில் தேறுவர்.

பெண்களுக்கு இந்தமாதத்தில் பலப்பல பிரச்சினைகள் தோன்றும்: விவாக முயற்சிகளும் இழுபறியாக இருக்கும். குடும்பப்பெண்களுக்கும் குடும்பத்தில் ஏற்படும் திடீர்நெருக்கடிகள் துன்பம்தரும்.

அதிஷ்டநாட்கள்:- பெப்.12,21,22பக,26,27பக
மார்ச்.3,4கா,7,10பக,11

துரதிஷ்டநாட்கள்:- பெப்.14,17இர,18,19,27இ
மார்ச்.1,12பி.ப,13.

மகரம்

உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2

மகரராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 2ல் லோகமூர்த்தியாக வலம்வருகின்றார். சூரியன் பலக்குறைவுடன் சஞ்சரிப்பதால் நற்பலன்கள் அதிகம் தடைப்படும். பொதுவாக இவர்களின் உடல்நலம் இடைக்கிடை குன்றும்: பொருள் வருமானமும் குறையும். ஏழரைச்சனிஸ்வரனின் சஞ்சாரமும் நிகழ்வதால் எதிலும் அலைச்சல், வீண்விரயம், பொருள்நட்டம், வாக்குவிரோதம் முதலான கெட்டபலன்களும் சேர்ந்து நிகழும். எனினும் குருபகவானின் சுபகோசாரசஞ்சாரமும் திருஷ்டியும் இந்த இராசிக்கு இருப்பதால் அதிக துன்பம் ஏற்பட இடமில்லை.

குடும்பத்தில் பிணி பீடைகள் அடிக்கடி ஏற்படும். கணவன் மனைவி பிணக்குகள் அல்லது பிரிவுகள் கூட ஏற்படக்கூடும். தக்கதருணத்தில் குடும்பப்பெரியவர்கள், புத்திரர்களின் உதவிகள் கிட்டும்

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை தொடரும். வாடிக்கையாளரின் வருகையும் குறையும்: கடன் நிலுவைகளும் கைக்குவந்து சேராது. புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளால் தொல்லைகளதிகரிக்கும். சிலருக்கு பதவி இழப்பு அல்லது பதவி விலகுதல் கூட இடம்பெற்றாலும் ஆச்சரியமில்லை. சகஉத்தியோகத்தரின் உதவி ஒத்தாசைகளால் ஆறுதல் பெறுவர்.

விவசாயிகளுக்கு இயற்கை செயற்கை ஏதுக்களால் பயிர் அழிவு தொடரும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் கிடையாது. விவசாயப்பணிகளிலும் நட்டம் ஏற்படும். கடன்பயமும் ஏற்பட்டு வாழ்க்கைத்தரமும் குறையும்.

தொழிலாளர் மத்தியில் அமைதியின்மையும் ஆர்ப்பாட்டங்களும் ஏற்படும். வேலையில்லாமையால் இவர்களின் வருமானம் குறைவுறும். ஒப்பந்தத்தொழில்களையும் சரியாகச் செய்ய முடியாமையால் நட்டம் ஏற்படும்.

மாணவர் மத்தியில் ஏமாற்றமும் அதிருப்தியும் ஏற்படுதலால் கல்வி ஊக்கம் குன்றும். ஆசிரியரி மாணவரி மத்தியில் நல்லிணக்கம் ஏற்படுதலால் வேண்டாவெறுப்பாக ஆசிரியர்களுக்காகக் கல்வியைத் தொடருவார்கள்.

பெண்களின் பொறுமைக்குச் சோதனையான மாதம் இது என்று கூறினாலும்தகும். விவாகமுயற்சிகள் அலைச்சல் மூலம் கைகூடிவரும். குடும்பத்தில் ஏற்படும் திடீர்நெருக்கடிகள் குடும்பப் பெண்களைத் திணறவைக்கும்.

அதிஷ்டநாட்கள்:- பெப்.13பக,14,23,24,27கா
மார்ச்.1,4பக,5,8பக,9,13

துரதிஷ்ட நாட்கள்: பெப். 15,16,17மு-ப.,21:
மார்ச் 2, 3, 4இரவு.

கும்பம்

அவிட்டம், 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3-ம் கால்

இந்த இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் சென்மத்தில் (1ல்) தர்மபரமூர்த்தியாகப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வதால் நற்பலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. ஆனால் ராசிஅதிபன் லாபத்தில் இருந்து திருஷ்டி செய்வதால் நன்மைதீமை கலந்த பலன்கள் நிகழும். இவர்களின் உடல்நலம் இடைக்கிடை பாதிக்கச்செய்தாலும் குடும்பநலம் சீராக இருக்கும். அந்நியர் உதவி அந்நியதேசப்பொருள்வரவு என்பன கிடைக்கும். பொதுவாக இவர்களின் பொருள் வருமானமும் ஓரளவு கூடும். ஆனால் எதிர்பாராத திடீர்நெருக்கடிகளும் ஏற்படுதலால் வீண்செலவுகளும் உண்டாகும். வீட்டில் சுபசோபனங்கள் கொண்டாட்டங்கள் நிகழச்சாத்தியமில்லை.

குடும்பத்தில் சிறுசிறுபிணக்குகள் அவ்வப் போது தோன்றிமறையும். குடும்பச்செலவுகளும் கூடும். இனசனபந்துக்களுடன் பகைவிரோதங்கள் உண்டாகும். புத்திரர் சகோதரர் உதவிஒத்தாசைகள் கிடையாது.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை ஏற்படும். நிதிக்கையிருப்பும் குன்றும். கடன் நிலுவைகளால் முதலீடுகளின் வருமானமும் வீழ்ச்சியுறும். வாடிக்கையாளரின் வருமானமும் வீழ்ச்சியுறும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத அவலநிலை ஏற்படும். வேலைப்பழுவும் பொறுப்புக்களும் கூடும். இலருக்குப் பதவிவிலகல் அல்லது இழப்புக்கள் கூட ஏற்படலாம்.

விவசாயிகளுக்கு சனிபகவான் வலுப்பெறுவதால் பயிர்செழிப்பும் விளைச்சலும் கூடும். விவசாயப்பண்ணைகளிலும் லாபம் கிடைக்கும். விளை பொருட்களுக்குச் சந்தைப்படுத்துதலில் நியாய விலை கிடைப்பது கடினம்.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் கிடைக்கும். வேலைக்கேற்ற ஊதியமும் பெறுவர். தினச்சம்பளத் தொழிலாளரின் நாளாந்த சீவனத்துக்கும் கூடுதலாக வருமானம் பெறுவர்.

மாணவர் கல்வித்தடைக்காரணிகள் ஏற்படினும் சுயமுயற்சியுடன் கல்வியைத் தொடர ஆசிரியர்கள் உதவுவார்கள். முக்கியமாகத் தொழில் நுட்பத்துறை மாணவர்கள் சித்தியுண்டு.

பெண்களுக்கு இந்தமாதத்திலும் மனநிறைவு ஏற்படுவது கடினம். கன்னிப்பெண்களின் விவாகாதிகளுக்குத் தடைதாமதங்கள் ஏற்படும். குடும்பத்தில் நிகழும் எதிர்பாராத சம்பவங்களால் குடும்பப்பெண்கள் கலக்கமடையநேரும்.

அதிஷ்டநாட்கள்:- பெப்.12,16,17பக,26,27பக
மார்ச்.2கா,3,4கா,7,10ப

துரதிஷ்டநாட்கள்:- பெப்.17இர,18,19,23,24
மார்ச்.4பக,5,6மு.ப

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசிக் காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 12ல்(விரயத்தில்) ராஜ மூர்த்தியாக வலம் வருகின்றார். சூரியன் மூர்த்தி பலம் பெற்றாலும் தானபெலம் குன்றுவதால் நன்மை தீமை கலந்த பலன்களே நிகழும். கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதத்தில் இவர்களின் உடல்நலம், குடும்ப நலம் என்பன பாதிப்படையும். பொருள் வருமானத்திலும் செலவுகள் கூடும். அலைச்சல் மூலம் காரியசித்தியும் பெறுவர். ஆனால் இராசி அதிபன் குருரகோசாரசஞ்சாரம் செய்வதும் சூரியன் இராகு சேர்க்கையும் சனி, கேது திருஷ்டியும் பெறுவதும் மேற்கூறிய சுபபலன்களை அதிகம் குறைவடையச் செய்யும்.

குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகளும் பிணக்குகளும் இடைக்கிடை தோன்றிமறையும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் கூடும். இனசன பந்துக்களால் பகைவிரோதங்கள் கூட உண்டாகும்.

வர்த்தகர்களுக்குப் புதன் லாபத்தில் பலம் பெறுவதால் மாதமுற்பகுதியில் வியாபார முன்னேற்றம் தொடரும். நிதிநெருக்கடிகள் ஏற்பட்டாலும் வியாபாரச் சிறப்பால் சமாளித்துக் கொள்ளுவார்கள்.

உத்தியோகத்தர்களுக்குப் பதவிப் பொறுப்புக்கள் கூடும். மேலதிகாரிகளின் பாராட்டுகளும் பெறுவார்கள். பதவிசம்பந்தமான வீண்செலவுகளையும் இவர்கள் சுமக்க வேண்டி இருக்கும்.

விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவுகள் கூடினாலும் ஓரளவு பயிர்விளைச்சல் கிடைப்பதால் நட்டம் வராது. விவசாயப்பண்ணைகளிலும் லாபம் கிடையாவிட்டாலும் நட்டம்வராது. விளைச்சலுக்கு நல்ல சந்தைவரய்ப்பும் பெறுவர்.

தொழிலாளருக்கு இந்தமாதமும் வேலைவசதிகள் தொடர்ந்து கிடைக்கும். அதனால் இவர்களின் வருமானத்தில் வாழ்க்கைத்தரமும் உயரும்.

மாணவர் கல்வி முன்னேற்றத்தில் தடைகள் இடைக்கிடை ஏற்படும். தொழில்நுட்பத்துறை மாணவர்கள் சிறப்புச் சித்திகள் பெறமுடியும். பொதுவாக மாணவர்களின் சுயமுயற்சிகளே கல்வித்தேர்ச்சியுண்டாக்கும்.

பெண்களுக்கு பொறுமைக்கு சோதனையான மாதம். இவர்கள் உணர்ச்சிவசப்படுதலால் அவமானப்படவும் நேரலாம். விவாகாதி முயற்சிகளிலும் பெரும்பாலும் தோல்விகளே உண்டாகும்.

அதிஷ்டநாட்கள்:- பெப்.18பக,14,18,19,27இர
மார்ச்.1,4பக,5,8பக,9,13

துரதிஷ்டநாட்கள்:- பெப்.21,22பக,26,27பக
மார்ச்.6பி.ப,7,8காலை.

சுபமுகூர்த்தம் வைத்தல்

"ஞானி"

தொடர் 4

விவாகப்பதிவு செய்தல்

விவாகத்துக்கு சொல்லப்பட்ட வார நக்ஷத்திரங்களில் விவாகப்பதிவு செய்யலாம்.

பொன்னுருக்கல்

திங்கள், புதன், வியாழன், வெள்ளி வாரங்கள் நன்று;

சதுர்த்தி, அஷ்டமி, நவமி, சதுர்த்தசி, அமாவாசை தவிர்ந்த திதிகள் உத்தமமானவை.

அசுவினி, ரோகிணி, மிருகசிரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்தரம், அத்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் நன்று.

பொன்னுருக்கல் முற்பகலில் செய்வதே உத்தமமானது.

சௌளம்

3 அல்லது 5-வது வயதில் சௌளஞ் செய்க. சித்திரை, வைகாசி, ஆனி, தை, பங்குனி, மாதங்கள் நன்று. திங்கள், புதன், வியாழன், வெள்ளி வாரங்களில் செய்வது உத்தமம்.

அசுவினி, ரோகிணி, மிருகசிரிடம், புனர்பூசம், பூசம், உத்தரம், அத்தம், சுவாதி, அனுஷம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி நட்சத்திரங்களும் 8-ம் இடம் சுத்தமான லக்கினங்களும் சௌளம் செய்ய நன்று. பிராமணர்கள் ஞாயிற்றுக்கிழமையில் சௌளம் செய்யலாம்.

உபநயனம்

சித்திரை, வைகாசி, ஆனி, தை, பங்குனி, மாதங்களும், திங்கள், புதன், வியாழன், வெள்ளி, வாரங்களும், அசுவினி, ரோகிணி, மிருகசிரிடம், புனர்பூசம், பூசம், அத்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி, நட்சத்திரங்களும், 8-ம், 12-ம் இடம் சுத்தமான இடபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், மகரம், மீனம், லக்கினங்களும் உத்தமம்.

ருக்வேதிகளுக்கு குருவும், யஜுர்வேதிகளுக்கு சுக்கிரனும், சாமவேதிகளுக்கு குஜனும், அதர்வண வேதிகளுக்கு புதனும் அஸ்தமனமாயிருக்கும்போது உபநயனஞ் செய்தலாகாது.

கர்ணவேதனம்

ஜனனமான 12-ம், 16-ம் நாட்களில் அல்லது 7-8-12-ம் மாதங்களில் கர்ணவேதனஞ் செய்க.

அன்னப்பிராசனம்

ஆண் குழந்தைகளுக்கு 6-8--10-12-ம் மாதங்களிலும், பெண் குழந்தைகளுக்கு 5-7-9-11-ம் மாதங்களிலும் அன்னப்பிராசனஞ் செய்க.

ருதுசாந்தி

ருதுசாந்தி முகூர்த்தம் ருதுவான தினத்திலிருந்து ஒற்றித்த நாட்களில் பஞ்சாங்க யோகம் நன்றாக 8-ம் இடம் சுத்தமான லக்கினங்களில் அமைதல் வேண்டும்.

கிணறு வெட்டல்

திங்கள், புதன், வியாழன், வெள்ளி வாரங்களிலும், ரோகிணி, மிருகசீரிடம், மகம், பூசம், உத்தரம், அத்தம், அனுஷம், பூராடம், உத்தராடம், திருவோணம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி நட்சத்திரங்களிலும், இடபம், கடகம், கும்பம், மகரம், மீனம் லக்கினங்களும் கிணறு வெட்ட நன்று.

கிணறு வெட்டுவதற்கு தேய்பிறைக்காலம் சிறப்பானது.

வீட்டுக்கு கிழக்குத்திசையில் கிணறு இருந்தால் செல்வமும், தென்கிழக்கிலிருந்தால் புத்திர நாசமும், தெற்கிலிருந்தால் மரணமும், தென் மேற்கிலிருந்தால் களத்திரநாசமும், மேற்கிலிருந்தால் சம்பத்தும், வடமேற்கிலிருந்தால் சதி துரு நாசமும், வடக்கிலிருந்தால் ஆரோக்கியமும், வட கிழக்கிலிருந்தால் சந்தோஷமும், நடுவிலிருந்தால் பொருளழிவுமாம்.

விருந்துண்ணல்

வெள்ளி சனி திங்கள் புந்தி விருந்துண்ண நன்றும்
கள்ள வியாழன் கசப்பிக்கும் - எள்ளளவும்
தீராப் பகையாகும் தினகரனிற் செவ்வாயில்
வாராப்பகையே வரும்.

அதிஷ்ட எண் ஞானம்

— இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். —

(முன்தொடர்ச்சி)

தொடர் 11

ஒரு மனிதனின் உயிர்ப்புச்சக்தியை அவனது ஆதிக்க எண்கள் காட்டுகின்றன என்றும், அவனது உயிர்ப்புக்சக்தியை மாற்றும் சக்தி மனிதனுக்கு இல்லை என்றும், அதை இயக்கும்சக்தி மனிதனிடமே உண்டு என்று சென்றமுறை பார்த்தோம். மேலும் ஒருவரது உயிர்ப்புச்சக்தியை நேரடியாகப் பற்றி நிற்பது அவனது பெயர்தானென்றும், அப்பெயரின் அசைவே அதிர்வே அவனது உயிர்ப்புச்சக்தியை இயக்குகின்றது. அந்தப்பெயரின் அதிர்வு ஒலியசைவு அவனது உயிர்ப்புச்சக்திக்கு மிகப்பொருத்தமாக அமைந்து விட்டால், உயிர்ப்புசக்தியான மனிதன் தனக்குரிய எல்லையை மீறாமல் சௌகரியமாக, சந்தோஷமாக வாழலாம் என்று அறிந்தோம்.

எமது பெயரைக் கண்டகண்டபடி மாற்ற முடியாது: ஒரு கட்டுப்பாடான அமைப்பிலேயே மாற்றமுடியும். ஒருவனது வாழ்க்கையோடு நேரடியாகச் சம்பந்தப்படும் இப்பெயரை அமைக்கும் போது நாம் எவ்வளவு நிதானமாக இருக்க வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். அட்டவணைகளை வைத்துக்கொண்டு தன்மனம் போன போக்கில் பெயரை மாற்றிக் கொள்ளும் பலரை நான் அறிவேன். அவர்கள் பெயரமைப்பதையோ பெயர் மாற்றுவதையோ ஏதோ ஒரு சில்லறை விஷயம் என்று நினைத்து விடுகின்றார்கள்.

இதனால் இருந்த சகங்களையும்கூட இழந்து, மனநிம்மதியின்றி, வாழ்க்கையில் விரக்தியுற்று அநேகர் அல்லல்படுகின்றார்கள். சிலரது முடிவு தற்கொலையில்கூட முடிவதில் ஆச்சரியமில்லை. இவர்களின் இந்தவிபரீதச் செயல்களிலுள் வினையைத் தேடிக்கொண்டபின், எண்ஞான சோதிடத்தை பிழையானதென்றோ, உண்மையற்றதென்றோ கூறவும் தலைப்படுகின்றார்கள். இதில் சிலர் நம்பிக்கையிழந்து ஏனையோரையும் தவறுக வழிநடத்தித் தலைப்படுகின்றார்கள். இவர்கள் எல்லோரும் இப்புனிதகலையின் இரகசிய நுட்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி பயன்பெற வேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

நான் ஏற்கனவே விளக்கியபடி, ஒவ்வொருவரும் தமது சரியான நிலையை தாமே அறிந்து கொண்டபின், அந்நிலையில் தாம் கஷ்டங்களை நீக்கி மகிழ்ச்சியடைய சிறப்படைய செழிப்படைய, முன்னேற்றமடைய வெற்றிபெற தமது பெயர் தமக்குப் பொருத்தமான அதிர்வைக் கொண்டுள்ளதா என்பதை நிட்சயப்படுத்திக் கொண்டு அந்தப்பெயரை பயிற்சித்து வரல்வேண்டும். ஒருவர் தமது சரியான நிலையை அறிந்து கொள்வதென்றால், தமது உயிர்ப்புச்சக்தியின் சரியான ஆதிக்கத்தை அறிந்து கொள்வதாகும்.

பிறந்ததிகதியை மட்டும் அறிந்து கொண்டால் போதாது, பிறப்பெண்ணுடன், கூட்டுஎண் பிறந்தகாலப்பகுதி ஆதிக்கஎண், மொத்தக் கிரக ஆதிக்கம் இன்னும் கலகலப்பாக இருக்கும் அல்லது ஆதிக்கம் செலுத்தும் ஏனைய எண் ஆகியவற்றை எல்லாம் நன்கறிந்ததின் பின்தான் பெயரெண்ணை அமைக்க முயலவேண்டும். நமது அனுபவத்தின்படி அதாவது ஜாதகத்தைக் கொண்டு மேற்கூறிய விபரங்களை, உண்மையான உயிர்ச் செறிவு ஆதிக்கத்தை அறிந்து மிக இலகுவாகவும் முற்றுமுழுதாகவும் அறிய முடிகின்றது.

ஒருவரின் ஜாதகத்தை வைத்துக்கொண்டு அவருக்குப்பெயர்அமைப்பதுதான்அதிவிசேடமானதென்பதே எனது கருத்தாகும். இம்முறையால் ஆயிரக்கணக்கான அன்பர்கள் பலனடைந்துள்ளார்கள். பலர் பெயரைப் பயிற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள். ஜாதகம் இல்லாதவர்கள் இந்த ஆதிக்க விபரங்களை எண்ஞான முறையிலேயே இயன்றவரையில் கண்டுபிடித்து பெயரை மாற்றிப்பயன்படுத்தலாம். ஆனால் அட்டவணைகளையும் நூல்களையும் அரைகுறைச் சோதிடரையும் துணைகொண்டு அவசரத்தில் பெயரமைத்து அல்

(23-ம் பக்கம் பார்க்க)

நவக்கிரகங்களின் தத்வங்கள்

க. சின்னையா, சங்குவாரி, கம்பளி.

ஒன்பது கிரகங்களின் பெயர்கள் யாவருக்கும் தெரிந்ததே. ஆனால் அவற்றின் பெயர்கள் அமைந்த காரணம்பற்றி அறிந்திருப்பவர் மிகச் சிலரே.

ரவி, சோமன், குஜன், புதன், குரு, சுக்ரன், சனி, ராகு, கேது என்ற பெயர்களைச் சிலரே ஆராய்ச்சி செய்துள்ளனர்.

ரவி என்றால் அக்கினி தத்துவமும் பிருதிவி தத்வமும் கலந்தவன் எனப் பொருள். எனவே சூரியனுக்கு மூலத் திரிகோண ராசியாக சிம்மம் அமைந்துள்ளது. கடகம்ஜலதத்வம்; சிம்மம்அக்னி தத்வம்; கன்னி ப்ருத்வீதத்வம். அக்னி தத்துவத்தைக் குறிப்பது 'ர' ப்ருவீதத் தத்வத்தைக் குறிப்பது 'வி' ரவி-சங்கரன் - ஞாயிறு.

இதுபோல சோமன் என்பது திங்களை அதாவது சந்திரனைக் குறிக்கும்; சோம என்றால் ப்ருத்வி என்று பொருள். சந்திரனின் நட்சத்திரங்களான ரோஹிணி, ஹஸ்தம், திருவோணம் இம்மூன்றும் ப்ருத்வி தத்வங்களான ரிஷபம், கன்யா, மகரம் இந்த ராசிகளில் அமைந்திருப்பது.

குஜன் அல்லது செவ்வாய் தான் பரமாத்மா 'கு' என்றால் பூமி, 'ஜ' என்றால் ஜனகன் அல்லது தகப்பன் எனக்கொள்க; ஆகவே இந்தப் பூமியின் ரக்ஷகனாக செவ்வாய் அதாவது அக்கினி ஸ்வரூபனாக இருப்பவன் எனப்பொருள். எனவே தான் கிருத்திகை நட்சத்திரம் முருகப் பெருமானுக்கு மிகவும் உகந்தது எனப் பெரியோர் கூறுவர். மற்ற ரகசியங்களை வல்லோர் வாய்கேட்டு அறிக. 'சேய்' (செவ்வாய்) இனிய கந்தன்.

புதன் என்றால் அறிஞன் என்று பொருள். ஆயில்யம், கேட்டை, ரேவதி இம்மூன்றும் கடகம், விருச்சிகம், மீனம் என்ற உபய ராசிகளில் அமர்ந்து ஆதிசேஷனில் சயனம் செய்து கொண்டிருக்கும் பரிநாராயணனைக் குறிக்கும்.

குரு என்பதன் பொருள் 'கு' என்றால் அறியாமை; 'ரு' என்றால் போக்குபவன் எனப் பொருள்; ஸ்ரீ இராமபிரான் பிறந்த புனர்வசுவும், விசாகமும், பூரட்டாதியும் இவரது நட்சத்திரங்கள். குபேர யோகத்துக்கு குரு. சகல சௌபாக்கியங்களையும் அனுபவிக்க குரு ஒன்பதாமிடத்தில் அமைந்திருக்க வேண்டும் என்பது பொது விதி.

சுக்ரன் அதாவது வெள்ளி; அதாவது மாலின் மனைவியான மஹாலட்சுமி மாதாவேதான். சுக்கிரன் மழைக்கு அதிபதியாதலின் மழைக்கோளெனப்படும். சுக்கிரன் இருக்கும் மண்டலம் அப்பு மண்டலம். சுக்கிரன் சுபஸ்தானங்களில் நிற்கப் பிறப்போர் திரிகால உணர்ச்சியும் இராஜயோகங்களும் உடையவராய் விளங்குவார் என்று கூறப்படுகிறது. எந்த ஜாதகத்தில் பரணி, பூரம், பூராடத்தில் ஒரு கிரஹமும் இல்லையோ அவன் தரித்திரனாக வாழ்வான் என்பது ஆன்றோர்கள் கண்ட உண்மை.

சனி-அதாவது 'சம்' என்றால் மங்களம்; 'னி' என்றால் தடை செய்து தருபவன். ஒருவனது கரும பலன்களை சரியாக எடுத்துக் காட்டும் கிரஹம் இது ஒன்றுதான். பூமியிலிருந்து வெகு தூரத்தில் இருப்பதாலும் மந்தமாக ஒவ்வொரு ராசியில் நடப்பதாலும் இவரிடம் பயந்து நடப்பது மங்களத்தைத் தரும். தன்னையே அர்ப்பணித்து மனித குலத்துக்கான சேவையை சனிக் கிரகம் ஆற்றி நிற்கிறது. இரும்பு, தாதுப் பொருட்கள் மீது ஆட்சி பெற்றுள்ள சனி சக்தி பெற்ற கிரகம்.

ராஹு அதாவது ரா-ராமன் ஹு நான் தான்; அதாவது தன் உடம்புக்காகவே தேஹாத்மாபிமானம் கொண்டு செய்யும் காரியங்களை தெளிவாக எடுத்துக் காட்டுபவன்.

கேது இவர் செவ்வாயின் சாயாக்கிரகமாகும். ராகு சனியின் சாயாக் கிரகமாகும். கேது என்றால் கொடி. நான் அதைச் செய்வேன் இதைச் செய்வேன் ஆண்டவன் எங்கே இருக்கிறான் என்று கூறும் நாஸ்திகன் சாயையாக இவர் விளங்குவார் என்பதாம்.

எல்லாம் வல்ல இறைவன் உமாதேவிக்கு உபதேசித்த சாஸ்திரோக்த சாரங்களின் அம்சமாக நவநாயகர்களை முதலாக வைத்து வேதங்களின் இரு கண்களுக்குச் சமமாக ஜோதிஷத்தை நிர்ணயித்து வைத்தியம், மந்திரம் இவை இரண்டையும் பிணைத்து உலகுக்கும் உலக மக்களுக்கும்

எடுத்துக்காட்டாக விளக்கிய தத்துவங்களோ இன்றைய மக்களுக்கு அரும்பெரும் உதவியாக விளங்குகிறது:

சூரிய பகவான் சூரிய மண்டலத்திலும், சந்திர பகவான் சந்திர மண்டலத்திலும், செவ்வாய் பகவான் செவ்வாய் மண்டலத்திலும் புத பகவான் புத மண்டலத்திலும், சுக்ர பகவான் சுக்ர மண்டலத்திலும், வியாழ பகவான் வியாழ மண்டலத்திலும், சனி பகவான் சனி மண்டலத்திலும், ராகு கேதுக்கள் சாயாக்கிரகங்களாகவும் இருந்து உலகை இயக்குகின்றனர் என்று கூறப்படுகிறது.

ஓரறிவு முதல் ஆறறிவு படைத்த உயிரினங்களுக்கும் இதர சகல வர்க்கத்திற்கும் ஆக்கல், அழித்தல், காத்தல் ஆகிய தொழில்களை விண்ணில் கம்பீரமாய்ப் பிரகாசித்து சஞ்சார ரூபமாய் இயக்கி வருகின்றனர். மண்ணிலும் இவர்கள் பல ரூபங்களாய் நின்று ஆட்சி புரிகிறார்கள் எப்படி? (1) ரத்னரூபம் (நவரத்னங்கள்) (2) உலோகரூபம் (நவலோகங்கள்) இவைகளின் உதவியால் கலபக்கங்களைத் தயாரித்து அநேக பிணிகளைத் தீர்க்க முடிகிறது. (3) மூலிகை ரூபம் (நவமூலிகைகள்) இவைகளின் உதவியால் வைத்தியம், மாந்திரீகம் ஆகியவைகளை அனுஷ்டிக்க முடிகிறது. (4) உப்புரூபம் (நவஉப்பு) (5) நவசாரம் ரூபமாகவும் காணுகிறார்கள். இவை மூலம் வைத்தியம், விவசாயம், விஞ்ஞானம் முதலியவைகளை அனுஷ்டிக்க முடிகிறது. (6) தானியரூபம் (நவதானியங்கள்) ஆகாராதி வர்க்கங்களாக அமைத்து நம்மைப் போஷிக்க வல்லவராகிறார்கள். இன்னும் எத்தனையோ ரூபங்களை நவநாயகர்கள் தம்முள் அடக்கிச் செயல்படுகிறார்கள். (நவரசங்களும் அதில் அமைகிறது) (7) பாஷாண வர்க்கம் (நவ பாஷாணங்கள்) இதைக்கொண்டு செய்யும் வைத்தியத்திற்கு தேவ வைத்தியம் என்றும் செடி, கொடி, மூலிகை தாவர வர்க்கங்களைக் கொண்டு செய்யும் வைத்தியத்திற்கு மனித வைத்தியம் என்று சொல்லலாம்.

நமது உடம்பில் இடம்பெற்றுள்ள நவநாயகர்கள்; சூரிய சந்திரர்கள் வல இடகண்களுக்கும் குஜ, புதர் வல இட செவிகளுக்கும், குரு, வாய்க்கும், சுக்கிரன் வயிற்றிற்கும், ராகு ஜலத்துவாரத்திற்கும், கேது மலத்துவாரத்திற்கும் அதற்குக் கீழுள்ள பாகம் பாதம் வரை சனி பகவானும் அங்கம் வகிக்கிறார்கள். எனவே நவநாயகர்கள் நமது சரீரத்திலுமாக இடம் பெற்றுவிளார்கள் என்பதாகிறது. உதாரணமாக நமது ஜாதகத்தை ஒரு ஜோதிடரிடம் கொடுத்து பலன் கேட்கும் காலத்தில் உனக்கு இந்தக் கிரகங்களின் தன்மை பலவீனப்பட்டிருப்பதால் அது சம்பந்தமான பாகத்தில் நோய் கண்டிருக்கும் என்று சொல்லிவிடுவார்கள். கர்ம வியாதிகள் வந்தபோது ஜோதிஷத்தின் உதவியால் பரிகாரங்கள் மூலமும், மந்திர யந்திர சித்திமூலமும் ஈடுபாடு கொண்டு பின் வைத்திய முறைகளை அனுஷ்டித்து கர்மவினையால் ஏற்பட்ட பிணிகளுக்கு நிவாரணம் காண்கிறார்கள். இதை பேரின்பக் கடவுளாகிய ஈஸ்வரன் உமையவளுக்கு போதித்ததாக சாஸ்திரம் கூறுகிறது.

நமது முன்னோர்கள் அனுஷ்டித்த முறைப்படி ஜோதிஷம், மந்திரம், வைத்தியம் ஆகிய மூன்று கலைகளையும் ஒருவரே பெற்று கிரக பலன்களை அனுசரித்து மனித வர்க்கத்திற்குச் செய்ய வேண்டிய தொண்டுகளைச் செய்து வந்திருக்கின்றனர். நடைமுறையில் இன்று காணப்படும் நிலையைப் பார்ப்போமானால் ஜோதிஷ சாத்திரத்திற்கும் பிணைக்கப்பட்டுள்ள இந்தத் தொடர்புமாறி ஜோதிஷமும், மந்திரமும், வைத்தியமும் ஒட்டுறவு இன்றி தனித்தனியே வெவ்வேறு பிரிவுகளாகச் செயல்படுவதைப் பார்க்கும் போது குறிப்பிட்ட சில அம்சங்களை இழந்து நாம் ஏமாற்றத்தை அடைந்து வருகிறோம் என்பது புலனாகிறது. இதுவும் நவ நாயகர்களின் விந்தைபோலும்.

மருத்துவப் பழமொழிகள்

- காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய் உண்டுவர கோலோச்சி கோமரனாய் நடக்கலாம்.
- பத்துமிளகு இருந்தால் பகைவர் வீட்டிலும் உண்ணலாம்.
- தன் காயம் காக்க வெங்காயம் வேண்டும்.
- கண்ணுக்குத் தெளிவு பொன்னுங்கண்ணி.
- கொழுத்தவனுக்கு கொள்ளு இளைத்தவனுக்கு எள்ளு.
- ஆற்றுநீர் வாதம் போக்கும், அருவிநீர் பித்தம் போக்கும். சோற்றுநீர் இரண்டையும் போக்கும்.
- மாதா ஊட்டாத அன்னத்தை மாங்காய் ஊட்டும்.
- சிறுபிள்ளை இல்லாதவீடு வீடல்ல, சீரகம் இட்டு ஆக்காத கறி கறியல்ல.

தொகுப்பு: M. P. பாலதுரை, வத்தலை.

சிவ விரதங்கள்

(முன் தொடர்ச்சி)

'கோப்பாய் – சிவம்'

உமாமகேஸ்வரவிரதம்

சைவசமயிகளுடைய ஆன்மீகமேம்பாட்டுக்குச் சிவராத்திரிவிரதம் மிகப்பொருத்தமானது. லௌகீக வாழ்க்கைச் சிறப்புக்கு உமாமகேஸ்வர விரதம் உகந்தது. அம்மையுடன் கூட அப்பனைச் சேர்த்துப் பூசித்து வழிபடும் இவ்விரதம் நிறைபதவிகள், நல்ல அந்தஸ்து, ஐஸ்வரியம் என்பவற்றை வழங்கக் கூடியது. கார்த்திகை மாதப் பௌர்ணமி நாளில் கொள்ளப்படுவது இவ்விரதம்.

சிவபிரான் உமாதேவியாருக்கு உபதேசித்த இவ்விரதத்தை தேவிகுமாரக்கடவுளுக்கும், அவர் நந்திகேஸ்வரருக்கும், அவர் துர்வாசருக்கும், அவர் அகத்தியருக்கும் அவர் கௌதமருக்கும் உபதேசித்தனர். கௌதம முனிவரிடம் இவ்விரத மகிமையைக் கேட்டறிந்து மஹாவிஷ்ணு, பிரம்மா, விஷ்ணு, சூரியன், சந்திரன் ஆகியோரும் அநுஷ்டிதலு பேறுபெற்றனர்.

கந்தபுராணம், சிவரஹஸ்யம் ஆகிய நூல்களில் இவ்விரதச்சிறப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஒரு சமயம் துர்வாசமகரிஷி பரமசிவனை வழிபட்டபின் அவரால் அநுக்கிரகபூர்வமாக வழங்கப்பட்ட வில்வமாலையையும் பெற்றுக் கொண்டு சென்றார். அப்போது கருடன்மீது பவனி வருபவராக வழியில் எதிர்ப்பட்ட மஹாவிஷ்ணுவிடம் அந்த வில்வமாலையைக் கொடுத்தார். மாலையின் மகிமையை உணராத மஹாவிஷ்ணு அதனைக் கருடனின் தோள்மீது அலட்சியமாகப் போட்டார். இதைக்கண்டு கோபமுற்ற துர்வாசர், மஹாலக்ஷ்மி விஷ்ணுவிடமிருந்து நீங்கி மீண்டும் பாற்கடலில் போய் விழக்கடவது என்றும் அதனால் யாவும் இழந்து திருமால் கொடியகாட்டில் சஞ்சரிக்கட்டும் என்றும் சாபமிட்டார்.

இவ்விதம் சாபத்தினால் துயருற்றுக் காடுகளில் அலைந்து அவருக்கு கௌதமமுனிவர் உமாமகேஸ்வர விரதத்தை உபதேசித்தார். முறைப்படி அதனை அநுஷ்டித்து இழந்தவை யாவும் மீளப் பெற்றார் மஹாவிஷ்ணு.

நித்தியகர்மாநுஷ்டானங்களை நிறைவேற்றிய பின், அஷ்டவித்தியேஸ்வரர்களுடன் கூடிய உமாமகேஸ்வர கும்பங்களை ஸ்தாபித்து புண்ணியாகவாசனம் முதலிய பூர்வாங்க பூஜைகளுடன் சகலோபசார பூஜையை முறைப்படி செய்யலாம். கும்பத்திற்குமுன் மஞ்சள் மாவினால் ஒரு பீடம் பத்தை உருவாக்கி வைத்து (சாணத்தினால் பிள்ளையார் பிடிப்பது போல) அதில் நந்திகேஸ்வரரை ஆவாகனம் செய்து பூஜிக்கவேண்டும்.

பதினைந்து இழைகளினாலான நூலொன்றின் முறுக்கில் பதினைந்து முடிச்சுக்களை இட்டு அதனையும் கும்பத்தில் வைத்துப் பூஜித்தபின் மணிக்கட்டில் அதனைக்கட்டிக்கொள்ள வேண்டும். அப்பமும் பழமும் மட்டும் இரவு ஒருநேரம் புசித்தல்முறை; முடியாதவர்கள் பகலில் ஒருபொழுது போசனம் செய்யலாம்.

பதினைந்து வருடங்கள் தொடர்ந்து இவ்விரதம் கைக்கொள்ள வேண்டும். அதன்பின் உரிய முறைப்படி பிரதிமைகள் செய்து, கும்பம் வைத்துப் பூஜைகள் செய்தோ ஆலயம் சென்று அபிஷேகம் முதலியவற்றை உரியமுறைப்படி சங்கல்ப பூர்வமாகச் செய்தோ விரதபலனைத் தருமாறு வேண்டுதல் செய்து பூர்த்தி செய்யலாம். விரத பூர்த்தியின்போது தம்பதிபூஜை செய்வதும் நன்று. (தம்பதி பூஜைபற்றிய விளக்கம் சோமவார விரதப் பகுதியில் உண்டு.)

திருணபிந்து என்றமுனிவர் தமது கண்பார்வையை இழந்து வருந்தி இவ்விரதமிருந்து கண்பார்வையை மீளப்பெற்றார். சரஸ்வதி, காயத்திரீ என்ற இருமங்கையரைப் பிரம்மதேவன் அடைந்ததும் இந்திரன் சயந்தனை மகனைப் பெற்றதும், வசிட்டர் காமதேனுவை அடைந்ததும் மிதிலையரசன் சீதையை மகளாகப் பெற்றதும் இவ்விரத மகிமையினால்தான்.

சிவராத்திரி விரதம்

சிவபரம்பொருளையே முழுமுதற்கடவுளாகக் கொண்டொழுகும் சைவர்களுக்கு மிகமுக்கிய மானவிரதம் சிவராத்திரியாகும். லௌகீக இன்பங்களை மட்டும் இச்சித்து வழிபடுவதன்றி ஆன்மலாபத்தை நாடி - நிலையாமையை உணர்ந்து இம்மை மறுமை என்ற இருமைக்கும் பயன்தரும் இந்த மஹாசிவராத்திரி விரதத்தைக் கைக்கொள்ள வேண்டியது ஒவ்வொரு சைவசமயியினதும் கடமை.

சிவராத்திரி விரதத்தை யாதொருபலனையும் விரும்பாதவரும்-வைஷ்ணவருங்கூட - அநுஷ்டிக்க வேண்டுமென்று கருடபுராணம் முதலிய பலபுராணங்கள் கூறுகின்றன.

மாசிமாதத் தேய்பிறைச் சதுர்த்தசித்திதியிலே சிவராத்திரிவிரதம் கைக்கொள்ளப்படுகிறது. பகல் திரயோதசியிருந்து இரவு சதுர்த்தசி வியாபித்திருத்தல் விசேஷமானது. திரயோதசி சக்தி ஸ்வரூபம் சதுர்த்தசி சிவஸ்வரூபம் பாரணையின் போதும் சதுர்த்தசி இருக்குமாயின் நன்று.

மாதசிவராத்திரி என்ற பெயரில் மாதந்தோறும் சிவராத்திரிவிரதங்கள் வருகின்றபோதும் அவை அநுஷ்டிக்கப்படுவது குறைவு. நான்கு வகையான சிவராத்திரிகளைப் பற்றி உபதேசகாண்டம் கூறுகிறது. அமாவாசையும் சோமவாரமும் கூடியதினத்தில் வருவது யோகசிவராத்திரி. மாதந்தோறும் தேய்பிறைச் சதுர்த்தசியில் வருவது மாதசிவராத்திரி, மாசிமாதம் வளர்பிறைப் பிரதமை முதல் தேய்பிறைத் திரயோதசிவரை பகலில் மட்டும் உணவருந்தி மறுநாள் சதுர்த்தசியில் அதாவது மஹாசிவராத்திரி விரதநாளில் உபவாசமாக இருந்து நித்திரை விழித்தல் மூன்றுவதுவகை மஹாசிவராத்திரி நான்காவது.

திருநந்திதேவரிடம் இவ்விரதத்தை உபதேசமாகப் பெற்று சூரியன், முருகன், விஷ்ணு, பிரம்மா, மன்மதன், யமன், இந்திரன், சந்திரன், அக்கினி, குபேரன் ஆகியோர் கைக்கொண்டு பல்வேறு வரங்களைப்பெற்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன.

ராஜசேகர பாண்டிய மன்னன் வெள்ளியம்பலத்தில் சிவபெருமானுக்குச் சிவராத்திரியில் நான்குயாமப் பூஜைகளையும் மிகவிசேடமாகச் செய்வித்து, தொடர்ந்த ஒரேகாலே ஊன்றி ஆடக்காலநோகுமே என்று வேதனை கொண்டு இறைவனை வேண்டிக் காலமாறி ஆடச்செய்து பேரானந்தமடைந்தான் என்று திருவிளையாடற் புராணம் கூறும்.

சிவபிரானே உமாதேவியாருக்கு உபதேசித்த இவ்விரத மகிமையைச் சூதபுராணிகர் ஏனைய முனிவர்களுக்கு எடுத்துக்கூறுவதாகப் புராணங்களும். கந்தபுராணம், லிங்கபுராணம், சிவமகாபுராணம், பிரம்மோத்திரகாண்டம் முதலியவற்றில் விரிவாகப் பேசப்படும் இவ்விரதத்தின் சிறப்பை எடுத்துரைக்க ஒரு தனியான புராணத்தையே ஆக்கியிருக்கிறார் நம்நாட்டவரொருவர்.

கன்னகம் வரதபண்டிதரவர்கள் இயற்றிய இந்தச் சிவராத்திரி புராணமானது பல இடங்களில் சிவராத்திரி நாட்களில் படனம் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. வாதுளம் முதலிய ஆகமங்களிலும் சில உபாகமங்களிலும் இதன் சிறப்புக்கள் எடுத்தோதப்படுகின்றன.

ஒருசமயம் படைப்புக்கடவுளாகிய நான்முகனும் காத்தற்கடவுளாகிய திருமாலும் தானே பெரியவன், தானே பெரியவன் என்று தம்முள் வாதிட்டு நின்றனர். இவ்வேளை அவர்களருகே ஓர் அக்கினிப்பிழம்பு தோன்றியது. "இவ்வக்கினியின் அடியையாவது முடியையாவது கண்டு வருபவனே பெரியவன்" என்று ஓர் அசரீரி முழங்கியது.

உடனே பிரம்மா அன்னப்பட்சியராகமாறி வானத்தில் பறந்து முடியைத்தேடிப் புறப்பட்டார். விஷ்ணு பன்றி வடிவெடுத்து நிலத்தைத் தோண்டிக் கீழே புகுந்து அவ்வக்கினியின் அடியைத் தேடிப்புறப்பட்டார். நீண்டகாலம் முயற்சித்து முடியாமல் தோல்விகண்டு இருவரும் திரும்பினர்.

தாம் வெறும் கருவிகளேயென்றும் தம்மை இயக்கும் ஒரு மேலான பரம்பொருள் உண்டு என்றும் அதுவே சிவபரம்பொருள் என்றும் உணர்ந்து அவ்வக்கினிக்கொழுந்தின் முன் அவர்களிருவரும் மண்டியிட்டு நின்றனர். அவர்கள் செருக்கையடக்கிய சிவபிரான் அவர்களுக்கு அருள் புரிந்ததுடன் அந்தச் சோதிவடிவம் தோன்றிய நாளைச் சிவராத்திரி விரதநாளாக அநுஷ்டிக்குமாறும் கூறினார்.

காட்டிற்கு வேட்டையாடச் சென்ற வேடனொருவன் வழிதப்பிப்போய், இருட்டிவிட்ட காரணத்தால் தடுமாறிக்கொண்டிருந்தான். இரவுப் பொழுதைப் பாதுகாப்பாகக் கழிப்பதற்காக ஒரு மரத்தின் மீது ஏறியிருந்தான். தான் தூங்கிவிட்டால் மரத்திலிருந்து கீழே விழுந்து ஏதாவது

சிவராத்திரி இரவு நான்கு யாமமும் சிவ பூஜை, சிவலிங்கவழிபாடு அவசியம். நான்கு யாமப்பூஜைகளும் அவ்வக்காலத்தில் செய்வது உத்தமம். ஒரேகாலத்தில் சேர்த்துச் செய்வது மத்திமம். நான்குயாமப் பூஜைகளின்போது பரிவார பூஜைகளில் விநாயகருக்கும் சண்டேஸ்வரருக்கும் மட்டும் பூஜைசெய்தால் போதும். ஏனையபரிவாரங்களுக்குப் பூஜை அவசியமில்லை.

இரவு பதினொரு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்தகாலம் அதாவது சுமார் 11-30 மணி முதல் 12-15 வரையிலான காலம் லிங்கோற்பவ காலமாகும். இரவுமுழுதும் விழித்திருக்க முடியாதவர்கள் லிங்கோற்பவகாலம் முடியும்வரையாவது விழித்திருத்தல் நன்று.

துஷ்டமிருகங்களுக்கு இரையாகிவிட நேரும் என்பதால் மரத்தின் இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்துக் கீழேபோட்டுக்கொண்டிருந்தான்.

அன்றையதினம் சிவராத்திரி என்பதும், அவன் ஏறியிருந்த மரம் ஒரு வில்வமரம் என்பதும். கீழே இருந்த ஒரு சிறிய சிவலிங்கத்தின்மேல் அவன் பறித்துப்போட்ட வில்வமிலைகள் விழுந்தன. என்பதும் அந்தப்பாம்பனுக்குத் தெரியாது. ஆனால் வேட்டை தேடி அலைந்ததில் பகல் முழுவதும் உணவின்றியிருந்து இரவில் தூக்கமின்றி விழித்திருந்து சிவலிங்கத்துக்கு வில்வமிலையால் அர்ச்சித்த படியால் அவனுக்கு முத்தியின்பம் கிட்டிற்று. அறியாமல் செய்த நற்காரியத்துக்கே இப்பேறு கிட்டிற்றென்றால், அறிந்து செயல்படும்போது கிட்டும்பேறு எவ்வளவு?

இவ்வித மகிமைபொருந்திய நாளில் முறைப்படி நித்திய கரும நுஷ்டானங்களைச் செய்து சிவாலயம் சென்று உபவாசமிருந்து இரவு முழுவதும் தூக்கம் ஒழித்து, சிவநாமஜபனை, பஞ்சாக்ஷர ஜபம் முதலியவற்றில் ஈடுபட்டிருந்து மறுநாள் அதிகாலை நித்தியகருமம் முடித்து எட்டரை மணிக்கு முன் பாரணை செய்வது விதியாகும்.

18-ம் பக்கத் தொடர்ச்சி

லது பெயரைமாற்றி வாழ்க்கையில் வேண்டாத சிக்கல்களை ஏற்படுத்திக் கொள்ளாதிருக்குமாறு நேயர்களை வேண்டுகின்றேன்.

இந்த எண்ஞான முறையில் பெயரமைப்பதில் பின்வரும் விசயங்களை நாம் கவனிக்க வேண்டி உள்ளது.

1வது பெயரின் முதல் எழுத்து
2வது இனிசலோடு சேர்ந்த மொத்தப் பெயரெண்
3வது இனிசல் சேராத தனிப்பெயர் எண்
4வது செல்லப்பெயர் எண் அல்லது வீட்டில் அழைக்கப்படும் பெயர் எண்
5வது அப்பெயரில் முக்கிய ஆதிக்கம் செலுத்தும் எழுத்துக்களும் அவற்றின் நிலையும்.
6வது உங்களுடன் இருப்பவர்களின் எண்களின் தாக்கம், இதுவரை தாக்கத்துக்குள்ளான எண்

இந்த ஆறு விசயங்களையும் வைத்து பெயரமைக்கும் பகுதியை இருபெரும் பிரிவாகக் கொள்ளலாம்.

1. குழந்தைக்குப் புதிதாகப் பெயரமைத்துக் கொள்ளுதல்.
2. வயதானவர்களுக்கு - இருக்கும் பெயரைச்சரி செய்தல் அல்லது ஒருசில எழுத்துக்களை மாற்றி அதிஷ்டப் பெயராக அமைத்தல்.

இந்த இரண்டு விசயங்களையும் அடுத்தடுத்த தொடர்களில் பார்ப்போம்.

ஆய்வு மன்றம்

கே. நவரட்ணம், ரெம்பிள் ரோட், யாழ்ப்பாணம்.

தங்கட்கு தொழில் அனுகூலம் தற்போது சாதீயமாக இல்லை; ஏழரைச்சனிக் கடைக்கூறு நடைபெறுவதால் அவதானமாக இருக்கவும். சனி வழிபாடு மேற்கொண்டு வரவும்.

திருமதி ப. பாலச்சந்திரன், கொடிகாமம்.

ஜாதகப்படி பெற்றோருக்குக் குடும்பப்பிரிவுகள் ஏற்பட இடமில்லை. ஜாதகர் கல்வி, தொழில் முதலியன சிறப்படைந்து நல்வாழ்வு வாழ்வர். சந்தி - தர்மலிங்கம், அரியாலை.

தங்கள் விண்ணப்பம் கிடைத்தது; ஆனால் வினா எதனையும் காணவில்லை;

வி. நவரத்தினராசா, தங்கோடை, காரைநகர்.

உங்களுக்கு உயர்கல்வி மேற்கொள்ள வாய்ப்பு உண்டு. அநேகமாக ஆசிரியத்தொழில் கிடைக்க இடமுண்டு,

ரம்யா, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம்.

தங்கள் ஜாதகத்தில் 5-ம் அதிபதி 7-ல் இருப்பதால் காதல் விவகாரங்களில் ஈடுபாட்டைக் காட்டுகிறது. ஆயினும் காலதாமதம் ஏற்படும்.

D: அந்தனி பாக்கியராஜா,
ஹெலெஸ்வீதி, கொழும்பு.

உங்களுக்கு தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் சுக்கிரதசை முன்னேற்றத்திற்குகந்ததாக இல்லை;

த. யோகானந்தன், ஆரையம்பதி. காத்தான்குடி.

தங்கள் உதயலக்கினம் சரியானது. கல்வி நிலையில் முன்னேற்றம்பெறும் சாத்தியமுண்டு.

வி; புருஷோத்தமன். கம்பளை.

ஆண்ஜாதகத்தில் சனிக்கு அடுத்தபடியாக புதன், சுக்கிரன் பலம் பெறுகிறார்கள். வெளிநாட்டுத் தொடர்புடைய தொழில்கள் ஏஜென்சித் தொழில்கள் நற்பலனளிக்கும். பெண்சாதகத்தில் 10ல் வியாழனிருந்தால் கணவனே விட்டுப்பிரிய வேண்டுமென்ற நியதி இல்லை. குடும்பவாழ்வு நன்கு அமையும்.

எஸ். மகாதேவன், டாம்வீதி, கொழும்பு.

உங்கள் விபரத்தின் பிரகாரம் நட்சத்திரம் - திருவோணம்; 4-ம் பாதம்; சந்திரராசி - மகரம்; உதயலக்கினம் - மகரம்.

இராஜேந்திரன், ஆரையம்பதி, காத்தான்குடி.

உங்களுக்கு அரசாங்க உத்தியோகங்கள் கிட்டும் அனுகூலங்கள் தென்படவில்லை. தனியார் துறை கூட்டுத்தாபனங்களில் வியாபாரம் மற்றும் தொழில்துறைகளில் 1989 ஜூன் மாதத்துள் கிடைக்கவாய்ப்புண்டு. ஜாதகத்தில் காலசர்ப்பயோகம் இருப்பதால் பொதுவாக நிம்மதிக்குறைவும் சிரமங்களும் இருக்கும். 30 வயதின்மேல் நற்பலனுண்டு.

கே. எஸ். சத்தியமூர்த்தி, கொழும்பு-6

உங்கள் விபரப்படி தற்போது சுக்கிரமகாதசை சந்திரபுத்தி நடைபெறுகிறது. 10ல் கேது இருப்பது தொழில் வாய்ப்பிற்கு நன்று. 89 ஏப்ரல் மாதத்தின்பின் அரசாங்க உத்தியோகம் கிடைக்க வாய்ப்புண்டு.

செல்வி. ச, விஜயகுமாரி,
இல 1, முனைவீதி, மட்டக்களப்பு.

உங்கள் ஜாதகத்தில் குறிப்பிடக்கூடிய தோஷங்கள் எதுவுமில்லை. வியாழன் 2-ம், 7-ம், 11-ம் இடங்களை திருஷ்டி செய்கின்றது. ஆகவே எதிர்கால வாழ்க்கை சிறப்பானதாவும் செல்வாக்கு மிக்கதாகவும் அமையும்.

பொ; செல்வராசா, காலிமுகவீதி, கொழும்பு.

உங்கள் ஜாதகப்படி உள்நாட்டிலேயே தொழில் வாய்ப்பு உண்டு, எனினும் 1990 மார்ச் மாதத்தின்மேல் வெளிநாட்டுப் பிரயாணம் கைகூடலாம்.

செ. தாக்ஷாயணி, காலிமுகவீதி, கொழும்பு.

இவரின் ஜாதகப்படி கல்வித்தானத்தில் புதன் இருப்பது கல்வித்துறைக்கு சிறப்பாயினும் சனியின் பார்வையைப் பெறுவதால் இடையிடையே தடைதாமதங்களைக் காட்டும். கணிதத்துறைக் கல்வி முன்னேற்றகரமானது.

வி. செல்வபரன், கட்டைக்காடு, கல்முடு.

ஜாதகப்படி 10-ம் வீட்டில் வியாழன் இருப்பது நன்மையினும் பாபகர்த்தரியோகம் பெறுவதால் எத்தொழிலிலும் விருத்தி குறைந்தே காணப்படும். வியாபாரம், விவசாயம் என்பனவே சிறந்தது.

செல்வி. தேவசேனாதிபதி ஜெயந்தி,
மூளாய், சுழிபுரம்.

உங்கள் ஜாதகப்படி 7இல் சனி இருப்பது விவாக விடயத்தில் தாமதத்தை உண்டுபண்ணும். 28 வயதின்மேல் சொந்தமற்ற இடத்தில் திருமணம் நடக்கலாம்.

த. தவசோதி குறும்னவெளி களுவாஞ்சிக்குடி

உங்களுக்கு கல்விஸ்தானம் நன்றாக இருப்பினும் 10ம் அதிபன் பலவீனமடைவதால் தொழில் வாய்ப்புக்கள் குறைந்தே காணும். 4ம் அதிபன் செவ்வாய் தனஸ்தானத்தில் இருப்பதால் பூமி சம்பந்தப்பட்ட தொழில் நன்மைதரும்,

இ. அழகேந்திரன் ஆரையம்பதி காத்தான்குடி.

உங்கள் ஜாதகத்தில் 10ம் வீட்டில் சனி, கேது இருப்பது தொழில்துறைக்கு நன்று. 89 அக்டோபருக்கிடையில் உத்தியோகம் கிடைக்க வாய்ப்புண்டு.

திருமதி. செ. விஜயலட்சுமி,
ஆடியபாதம்வீதி, திருநெல்வேலி

மகளுக்கு 1988 டிசம்பர் மாதத்தில் ராகுதசை முடிந்து வியாழன்தசை ஆரம்பமாகியுள்ளது. இப்புத்தி காலத்தில் எதிர்வரும் ஆனி மாதத்தின் மேல் திருமணம் கைகூட இடமுண்டு;

எம். எஸ். பி. கொழும்பு.

தங்கள் ஜாதகப்படி தற்போது கேதுதசையில் செவ்வாய் புத்தி நடக்கின்றது. மேலும் 7-ம், 2-ம் வீடுகளை சனி திருஷ்டிப்பது திருமணத்தில் தாமதத்தைக் காட்டுகின்றது. எனினும் 27 வயதனவில் திருமணம் கைகூட இடமுண்டு.

Registered as News Paper at the G. P. O. Sri Lanka.

Registered as News Paper at the G. P. O. Sri Lanka.

"சுடர் விளக்காயினும்
தூண்டு கோலொன்று
வேண்டும் அல்லவா?"

நாம் நற்பணி செய்ய எங்கள் தயாரிப்புக்களை
வாங்கி ஆதரியுங்கள்.

மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி
பெறுமதி வாய்ந்த பரிசில்களைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233

சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்.

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலரி' என்றும் வாடாமல் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பதே எமது அவா. எத்தனையோ கஷ்டங்கள் ஏற்படினும் மலரை வாடவிடாமல் பாதுகாக்க வேண்டியது வாசகர்களாகிய உங்கள் கடமையன்றோ; இதுவரை புதிய மலருக்கான சந்தாவைச் செலுத்தாதவர்கள் உடன் சந்தாவைச் செலுத்திப் பதிவு செய்வித்துக் கொள்வதோடு புதியசந்தாகாரர்களையும் சேர்த்து ஊக்கமளிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

சந்தா விபரம்:			
இலங்கைக்கு மாத்திரம்	வருட சந்தா	ரூ	54-00
வெளிநாட்டுக்கு (கப்பல் வழி)	வருட சந்தா	,,	90-00
மலேயா (விமான வழி)	வருட சந்தா	,,	192-00
இங்கிலாந்து (விமானவழி)	வருட சந்தா	,,	237-00

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 4-50 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

மணிதன், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:
உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal Thirukkanitha Nilayam. Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280